OCT. 50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை...



கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை. 4

வருஷ சந்தா

ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா

ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 10

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2

தீராத விளையாட்டுப் பிள்ளை 3

கிட்டு செய்த வேலை - என். ஸ்ரீநிவாஸன் .. 4

பென்ஸில் கதை - போட்டோக்கள் .. 9

'ஜூட்' விளையாட்டு - 'சுண்டு' 15

எழுத்திலே படங்கள் - 'மூட்டை' 16

ஜக்கு துப்பறிகிறுன் - 'ஆர்வி' 17

யானையும் குதிரையும் - நீங்களே செய்யலாம். 23

பெட்டைக்கோழி - எம். கே. சுந்தரம் .. 24

'மெஸர்ஷ்மிட்' கதை - 'குமுதினி' 25

உல்லாச வெட்டுக்கிளி - 'சோமசன்மா' .. 29

கப்பு கண்ட கனவு - 'நீலம்' 33

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 38

காலதேவன் சாபம் - நரசிம்மன் 41

பவழவல்லி - கி. ரா. 47

பொழுது புலர்ந்தது - 'கிரன்' 52

கிரிக்குட்டி வில்லு - தி. ஜ. ர. 56

கண்ணன் தபால் 60

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

இந்தத் தடவை 'வியூமாஸ்டர்' பரிசுக்காக வந்த கதைகளைப் படித்தபோது எவ்வளவு வேடிக்கையை அநுபவித்தேன், தெரியுமா? குழந்தைகளின் அற்புதமான கற்பனைத்திறமென்றாலே தனியாகத்தான் இருக்கிறது. இந்த முறை கதையின் முதல் பகுதியை நானே கொடுத்து விட்டேன். அதற்கு மேல் கதையை ஒட்டி முடிக்கவேண்டும். வந்த கதைகளில் எத்தனை விசித்திரம்! கிட்டுவை மகானாக, சாமர்த்தியசாலியாக, மகா கெட்டிக்காரனாக, உத்தம வீரனாகப் பலர் கதையில் காட்டியிருந்தார்கள். வேறு சிலர் அவனைப் பலே போக்கிரியாக, திருடனாக, குறும்புக்காரனாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அப்பாவி முருகேச முதலியார் இருக்கிறாரே அவர் நல்லவர்; ஆனால் கொஞ்சம் முன்கோபி. நான் அப்படித்தான் கற்பனை பண்ணியிருந்தேன். ஒரு குழந்தை அவரை அக்கிரமக்காரர் ஆக்கிவிட்டான்; அவர் திருட்டுத்தனமாக நோட்டுகளை அச்சடிக்கிறவராகிவிட்டார் அவன் கதையில், பாவம்! கிருதா மீசை குப்புசாமி வேஷம் போட்டுவந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்று கதை எழுதியிருக்கிறான் ஒரு பையன். ஒரு விஷயம் எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. எவ்வளவோ காலம் பேனாவைப் பிடித்து வழக்கப்பட்ட எழுத்தாளர்களுடைய கற்பனைக்கு இந்தக் குழந்தைகளின் கற்பனை சிறிதுகூடக் குறைந்ததல்ல என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆனால் அந்தக் கற்பனையை ஒழுங்குபடுத்தி ரஸமாகக் கோத்து நல்ல நடையில் எழுத வேண்டும். அப்படி எல்லாரும் எழுதுவதாக இருந்தால் எல்லாருக்குமே பரிசு கொடுக்க வேண்டுமே! அந்தச் சங்கடமே நேரவில்லை.

கீழைக்கரையில் இருக்கும் என். ஸ்ரீநிவாஸன் (S. 406) இந்தத் தடவை பரிசைத் தட்டிக்கொண்டு போகிறான். அவன் கதை இந்த இதழில் வெளியாகிறது. போட்டிக்கு வ
மற்றொரு கதை (ஜி. ஜயராம
தாம்பரம் எழுதியது) கண்ண
னில் வெளியாகும்.

கண்ணன் கழகப் பதக்கங்க
அனுப்பிக்கொண்டே இரு
கிறோம். மூன்றுமாதக் கூப
களை இதுவரையிலும் அனுப்
தவர்கள் சீக்கிரம் அனுப்பின
அவர்களுக்கும் பதக்கம் உட
கிடைக்கும்.

கண்ணன் தீபாவளிமலர் வெளி
யாகப்போகிற விஷயம் முன்பே
உங்களுக்கு ஜோஸ்யம் தெரி
திருக்கும். அடுத்த மாத இதழை
அமர்க்களமாக, தீபாவளி
மலராக வெளியிட ஏற்பாடு
செய்துகொண்டிருக்கிறேன்.

கண்ணன் கழகக் கூட்ட
சென்னையில் கனகுஷியா
நடந்ததிலிருந்து, ஒவ்வொ
ஊர்க்காரரும், "எங்கள் ஊரில்
எப்போது கூடுகிறீர்கள்?"
என்று கேட்கிறார்கள். அடுத்
படி திருச்சிராப்பள்ளியில் கூட
லாம் என்று எண்ணுகிறேன்.

கிரிக்கெட் விளையாட்டென்றால்
உங்களுக்கு எத்தனை ஆசை! பிர
பல கிரிக்கெட் ஆட்டக்காரர் ராம்
ஸிங்கைப் பார்த்திருக்கிறீர்
களோ? அவருடைய அற்பு
தமான விளையாட்டைப் ப
பிடித்துக் கண்ணனில் தொட
வெளியிடப்போகிறேன்.
வளி மலரிலிருந்தே இது
மாகும்.

தீராத விளையாட்டுப் பிள்ளை

கோளுக்கு மிகவும் சமர்த்தன் - பொய்ம்மை
சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசித் - தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான்.

'வியூ மாஸ்டர்' பரிசு பெற்ற கதை:

கிட்டு செய்த வேலை

என். ஸ்ரீநிவாஸன்

(கண்ணன் கழகம் S. 406)

பிரபல ஜவுளி வியாபாரி முருகேச முதலியார் கடையில் கமலாவின் அம்மா துணிகளை எடுத்து வைத்து விட்டு வந்தாள். எதிர் வீடு தான் முருகேச முதலியார் வீடு. அவர் பையன் கிட்டுவைக் கூப்பிட்டு, "கமலாவின் கையில் பணம் கொடுத்திருக்கிறேன். இரண்டு பேருமாகப் போய், துணிகளை வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

கடையில் குமாஸ்தா ரங்கசாமி மட்டும் உட்கார்ந்திருந்தார். வேறு பையன்கள் இல்லை. கிட்டுவும் கமலாவும் நுழைந்த சமயத்தில் கிருதா மீசை குப்புசாமியும் உள்ளே நுழைந்தான். ஆளைப் பார்த்தாலே முரடன் என்று சொல்லிவிடலாம். அவனைக் கிட்டு ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு தடவை பார்த்திருக்கிறான்.

கமலா ஐம்பது ரூபாயைக் கொடுத்து, துணிகளைப் பெற்றுக்கொண்டாள். ரங்கசாமி அந்த நோட்டுக்களை வாங்கி மேஜையின்மீது வைத்தார். கடைப் பையன் உள்ளே நுழைந்து வருவதைக் கண் அவர் திரும்பினார். அடுத் கணம் மேஜையிலிருந்த நோட டுக்களைக் காணவில்லை.

முருகேச முதலியார் வருகி சமயம். அவர் மிகவும் நல் வர்தான். ஆனால் மகா முன் கோபக்காரர். ரங்கசாமி தி திருவென்று விழித்துக்கொண் டிருந்தார்.

ஒரு நிமிஷம் ஆயிற்று. இரண்டு நிமிஷமும் ஆயிற்று. வரவர ரங்கசாமியின் மனசு பலமாக அடித்துக்கொண்டது. பீதியினால் முகம் கறுத்தது. 'ஒரு நிமிஷம் முன்னால் இருந்த பணம் எங்கே போயிருக்கும்!' என்று எண்ணங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடின.

முருகேச முதலியார் மிகவும் நல்லவர். அவருக்கு இந்த ஐம்பது ரூபாய் ஒரு பொருட்டல்ல. அவர் ஒழுக்கத்தைத்தான் விரும்பி ஆதரிப்பார். 'நாமே இந்த ரூபாயை எடுத்துவிட்டோம் என்று அவர் சந்தேகப்பட்டால் நமது பிழைப்புக்கு மோசம் வந்து விடுமே' என்று பலவிதத்திலும் கவலைப்பட்டார் ரங்கசாமி.

கிருதா மீசை குப்புசாமி அந்தக் கடையில் நுழைந்தபோது அவர் அவனைப்பார்க்கத்தான் செய்தார். ஆனால் அவனை அவருக்கு முன்பின் தெரியாது; ஆகையால் அவர் அவன் மீது சந்தேகப் படவில்லை. அவருடைய சந்தேகம் எல்லாம் கடைப் பையன் மீது தான்.

ரங்கசாமியின் பரபரப்பு அதிகமாயிற்று. மிகுந்த சிரமப்பட்டு அடக்கிக்கொண்டார். காற்றில் பறந்த தலைமயிரை ஒதுக்கி விட்டுக்கொண்டார். லேசாகக் கனைத்தார். தம்மைச் சமாளித்துக்கொண்டார். எங்கும் தேடிப் பார்த்த பிறகு கடைப்பையனை, “டேய்!” என்று அதட்டிக் கூப்பிட்டார்.

கடைப்பையன் வந்து நின்றான். அவனிடம் படபடப்போ பீதியோ காணப்படவில்லை. சர்வ சாதாரணமாகவே இருந்தான். அவன் மிகவும் நல்ல பையன். அந்தக் கடையில் அவன் ஐந்து வயதிலிருந்தே வேலை பார்த்து வருகிறான். இப்போது அவனுக்கு வயது பதினைந்து. இந்தப் பத்து வருஷ காலத்தில் அவன் ஒரு முறைகூட ஒழுங்கு தவறி நடந்துகொண்டதில்லை. குமாஸ்தா ரங்கசாமியே பல முறை அவனைப் புகழ்ந்து பேசி இருக்கிறார். அவ்வளவு நல்ல பையன். ஆனால் இப்போது இருக்கும் சந்தர்ப்பம் அவன் மேல் சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறதே!

"ஏண்டா, மேஜை மீதிருந்த பணம் எங்கேடா?" என்று கேட்டார் ரங்கசாமி. அவருக்கு இப்படித் திடுக்கென்று கேட்டு விட்டோமே என்று வருத்த மாகத்தான் இருந்தது.

"எந்தப் பணம், ஸார்?" என்று கேட்டான் கடைப் பையன்.

"முதலாளி மகனும் கமலாவும் கொண்டு வந்து கொடுத் தாங்களே, அது!" என்றார் ரங்கசாமி.

"எனக்குத் தெரியாதே, ஸார்" என்று பதிலளித்தான் கடைப்பையன்.

ரங்கசாமி சிறிது நேரம் யோசித்தார். ஒன்றும் தோன்ற வில்லை. அவருக்குக் கடைப் பையன்மேல் கோபமாக வந் தது. அவர் அவனைப் பார்த்து, "டேய்! நீ மரியாதையாப் பணத்தை வைக்கறயா? இல்லாட்டி உதை கிதை வேணுமா?" என்று அதட்டி னார்.

கடைப்பையன் திடுக்கிட் டான். "என்ன ஸார், இப்படி அபாண்டமாப் பழி சுமத்த றீங்க? எனக்குச் சத்தியமா ஒண்ணுமே தெரியாது, ஸார்!" என்றான்.

"உனக்கு ஒண்ணுமே தெரி யாதா? அப்படியானால் அப்போ ஏண்டா உள்ளே போனே?"

"அப்போ கிருதா மீசை யோட ஒரு ஆள் வந்தானே. அவன் ஒரு பனியன் கேட் டான். அது இருக்கான்னு பார்க்கப் போனேன். இல்லே. அவன் போயிட்டான். மற்றப் படி எனக்கு ஒண்ணும் தெரி யாது" என்று அழாக்குறை யாகச் சொன்னான்.

ரங்கசாமி மேலும் அதட்டி யிருப்பார். ஆனால் முதலாளி வருவதைக் கண்டு வாயை அடக்கிக்கொண்டார். முருகேச முதலியார் தமாஷ் பேர்வழி. முன்கோபம் மட்டும் அவரிடம் இல்லாவிட்டால் அவரைப் பத் தரை மாற்றுத் தங்கம் என்று சொல்லிவிடலாம். ஆனால் அதுதான் அவர் சுபாவ மாச்சே. அதனால் அவரை எட்டரை மாற்றுத் தங்கம் என்று கூப்பிடுவோமே! அவர் வந்தவுடனே குமாஸ்தாவைப் பார்த்து, "என்னங்காணும், என்ன? ஆளைப் பார்த்தால் பிசாசு பிடித்தவர் மாதிரி இருக்கிறதே!" என்றார்.

ரங்கசாமி திக்கித் திணறி விஷயத்தைச் சொன்னார். "பாருங்க, ரூபாயை வாங்கி இங்கேதான் வச்சேன்! மாயமா இருக்கே!" என்று அரற்றினார். "என் பிழைப் பில் மண்ணைப் போட்டு விடா தீர்கள். நான் ஏழை" என்று கெஞ்சினார்.

தன் அஜாக்கிரதையால் தான் இந்தத் திருட்டு நடந்த தென்றும் இனி அஜாக்கிரதை யாய் இருக்க மாட்டேன் என் றும் மனசில் படும்படி பேசி னார். முருகேச முதலியார்

மனம் இளகியது. இருந்தாலும் விசாரிக்காமல் விட்டால் திருட்டுகள் அதிகமானாலும் ஆகலாம் அல்லவா? ஆகையால் ரங்கசாமியையும் கடைப் பையனையும் அதட்டி அதட்டி விசாரித்தார். கடை முன் ஏராளமான கூட்டம் கூடி

கடையில் இவ்வளவு தடபுடல் நடக்கும் சமயத்தில் கிட்டுவும் கமலாவும் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தனர். பாதி வழியில் கிட்டு கமலாவை நிறுத்தினான். "இதோ பாரு, கமலா!" என்று சொல்லி, தன் சட்டைப் பையிலிருந்து



விட்டது. போலீஸ்காரர் ஒருவர், "என்ன விஷயம்" என்று விசாரித்தார். முதலியார் இளகிய மனசுடையவர். ஆகையால் போலீஸ்காரரிடம், "ஒன்றும் இல்லையப்பா" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

எதையோ எடுத்தான். கமலா ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள். அவன் கையில் கமலாவின் அம்மா கொடுத்த ஐம்பது ரூபாயும் இருந்தது! "என்ன கிட்டு இது! கடையிலேதான் ரூபாயைக் கொடுத்தோமே! இப்போ உன்

கையிலே எப்படி அது வந்தது? மாஜிக் மாதிரி இருக்கே!'' என்றாள்.

''பார்த்துக்கோ, ஐயா சமத்தை! நம்ம கடைக்குப் போனபோது கிருதா மீசையோட ஒரு ஆசாமி வந்தான் பாரு. அவன் பலே எத்தன். அவனை இதுக்கு முன்னாலே ரெயில்வே ஸ்டேஷனில் பார்த்திருக்கேன்; ஒருத்தரோட வாட்சைத் திருடினதுக்காகப் போலீஸ்காரன் கூட்டிண்டு போனான். அப்பேர்ப்பட்ட 'கேடி' நம்ம ரூபாயைக் குமாஸ்தாகிட்ட கொடுத்த உடனே அதையே பார்த்துக் கொண்டிருந்தான். எனக்குப் பெரிய சந்தேகமாப் போச்சு! அதனாலே மேஜை மேலே இருந்த ரூபாயை ஒருத்தருக்கும் தெரியாமே எடுத்துப்பைக்குள்ளே போட்டுண்டு வந்துட்டேன்'' என்று கிட்டு ஜம்பம் அடித்துக்கொண்டான்.

''அடடா! அப்படியானா வா, திரும்பிப் போவோம். உங்க அப்பா வந்திருந்தா பெரிய வம்பாப் போயிடும். பாவம், குமாஸ்தாவைப் பிடிச்சு விரட்டப் போறார்'' என்று அவசரப்படுத்தினாள்.

இருவரும் கடைக்குத் திரும்பிப் போய் முதலியாரிடம் விஷயத்தைச் சொல்லி ரூபாயைக் கொடுத்தார்கள். அவர், ''என்ன ஐயா, ரங்கசாமி! பார்த்தீரா? பையன் இப்பவே இவ்வளவு ஜாக்கிரதையா இருக்கானே. பின்னாலே என்னைவிடக் கெட்டிக்காரனாய் இருப்பான். இல்லையா?'' என்று கேட்டார்.

ரங்கசாமி சிரித்தபடியே, ''சந்தேகம் என்ன? கிட்டு கெட்டிக்காரனாய் இருப்பதற்குக் கேக்கணுமா?'' என்றார்.

''ரங்கசாமி! என்ன இருந்தாலும் கொஞ்சம் ஜாக்கிரதை வேணும். நான்கூட ஏதோ அவசரத்திலே உம்மையும் கடைப்பையனையும் கொஞ்சம் சந்தேகப்பட்டேன். போகட்டும்; இந்த மாதம் முதல் உங்க ரெண்டு பேர் சம்பளத்தையும் உயர்த்தியிருக்கேன். தீபாவளி சமயம். கொஞ்சம் ஜாக்கிரதையாய் இரும்'' என்றார் முருகேச முதலியார்.

ரங்கசாமிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் அவர் பல் எல்லாம் வெளியே தெரிந்தன. கடைப்பையனோ துள்ளிக் குதித்தான்.

''கிட்டு இந்தமாதிரி செய்யாவிட்டால் நமக்குச் சம்பளம் உயர்ந்திருக்குமா? எல்லாம் கிட்டு செய்த வேலை'' என்று இரண்டு பேரும் சேர்ந்து ஒரே சமயத்தில் கிட்டுவைப் புகழ்ந்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1950
MADRAS

பென்ஸில் கதை

எங்களைப் பார்த்தால் எவ்வளவு சாதாரணமான, எளிய பொருளாகத் தோன்றுகிறது!. அதோ உங்கள் பைகளில் எவ்வளவு அழகான பென்ஸில்கள்! எத்தனை வர்ணங்கள்! எத்தனை விதங்கள்! நாங்கள், பார்க்கப் போனால் ரொம்பச் சாதாரணப் பென்ஸில்கள் தான். ஆனால் எங்களைத் தயாரிக்க அமெரிக்காவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கிராபைட் (Graphite) என்ற மூலப் பொருள்களை வரவழைக்கிறார்கள். ஆப்பிரிக்காவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் சிவப்பு வர்ஜீனியா (Red Virginia) என்ற வழுவழுப்பான மரத் துண்டுகளை வரவழைக்கிறார்கள். கோதாவரி நதி தீரத்திலிருந்து ஒரு வகைக் களிமண்ணைக் கொண்டு வருகிறார்கள். இப்படியெல்லாம் சேகரித்துச் சென்னையில் உள்ள 'ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில்' பாக்டரியில் தயாராகும் என்னுடைய கதையைத்தான் கொஞ்சம் பாருங்களேன்!

ஆப்பிரிக்காவிலுள்ள கென்யா பிரதேசக் காடுகளிலிருந்து வெட்டி எங்களை மரச் சட்டங்களாக இங்கே அனுப்பியிருக்கிறார்கள்.

போட்டோ: எம். டி. வின்ஸென்ட். அநுமதி: 'ஸ்டார் ஆப் இந்தியா' பென்ஸில் பாக்டரி, சென்னை.



கிராபைட் பொடியையும் களிமண்ணையும் கலந்து நுண்ணிய பசையாக அரைத்து. இந்த ஸ்குரு பிரஸ்ஸில் வைத்து எங்களை மெல்லிய கம்பி களாக இழுக்கிருர்கள்



மிருதுவான கம்பிகள், கடினமான கம்பிகள் என்று எங்களைப் பிரித்து, பிங்கான் பெட்டிகளில் தனித் தனியாக மூடி வைக்கிருர்கள்



மரச் சட்டங்களில் பள்ளங்கள் இழைத்து நடுவே வஜ்ரப் பசை தீட்டுகிருர்கள்.





வஜ்ரப் பசை பூசியபின் அதில் பென்ஸில் கம்பிகளை வைத்துப் பொருத்துகிருர்கள்.





இந்த யந்திரங்களில் கொடுத்து நீங்கள் விரும்புகிறபடி உருண்டையாகவோ அறுங் கோண வடிவிலோ வெட்டி விடுகிறார்கள்.





எங்களில் பெரியவர்கள் சிறியவர்கள் என்று ஆகி விடாமல் ஒரே அளவாய் இருக்கும்படி இந்த யந்திரம் வெட்டி விடுகிறது



நாங்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்க வேண்டாமா? சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் முதலிய அரக்கு வர்ணங்களை இந்த யந்திரத்தின் உதவியாலேயே எங்களுக்குப் பூசுகிருர்கள்



இங்கேதான் எங்களுக்கு நாமகரணம் செய்கிருர்கள். எங்களைத் தயாரித்த தொழிற்சாலே, நாங்கள் மிருதுவானவர்களா, கடினமானவர்களா என்றெல்லாம் பொன் வெள்ளி எழுத்துக்களில் இந்த யந்திரம் எங்கள் மேல் அச்சடிக்கிறது

எங்களைப் பன்னிரண்டு பன்னிரண்டாகச சேர்த்துக் கட்டி பெட்டிகளில் அடுக்கி வைக்கிறார்கள்.

நாங்கள் கடைகளுக்குப் பிரயாணமாகிவிட்டோம். உங்கள் கைக்கு உடனே வர வேண்டியதுதான் பாக்கி!





'ஜூட்' விளையாட்டு

'சுண்டு'

இந்த விளையாட்டு சுவாரஸ்யமாய் இருப்பதோடு மட்டுமல்ல; நல்ல தேகப் பயிற்சியும் ஆகும். சாதாரண அரைகுறை ஆளாய் இருந்தால் ஏமாந்து போகவேண்டியதுதான்!

இந்த விளையாட்டு பலருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் விளையாடும் முறை, அதன் விதிகள் இவற்றைச் சரியாகக் கவனிப்பதில்லை.

16 அடி நீளம், 10 அடி அகலமுள்ள கோடுகளைப் போட்டுக் கொண்டு கட்டத்துக்கு ஒருவர் வீதம் நிற்கவேண்டும். நடுவில் நிற்பவன் 'ஜூட்' என்று ஒரு முறை கத்துவான். அவன் நடுவில் விட்டு விட்டு இருக்கும் கோடுகளின் மீதுதான் ஓடவேண்டும். நடு வட்டத்துக்குள் நாலு கற்களோ பந்துகளோ வைத்து அதை ஒருவரும் எடுக்காதபடி பார்த்துக்கொள்வதே அவன் வேலை. அதை எடுத்து, தலைக்கு ஒருவராக ஒவ்வொரு கட்டத்திலும் போய் நின்று ஜூட் என்று மற்றவர்கள் கத்தவேண்டும். ஒருவனே எல்லாப் பந்துகளையும் எடுக்கலாம். உடனே ஜூட் என்று தெரியாமல் கத்திவிட்டால் அவன் அவுட் ஆகிவிடுவான். எடுத்த பந்துகளை ஒவ்வொரு கட்டத்துக்கும் அவன் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். அல்லது மற்றவர்கள் வந்து வாங்கிக்கொண்டு போகவேண்டும். பிறகுதான் 'ஜூட்' சொல்லலாம். நடுவில் இருப்பவன் ஒரு கோட்டிலிருந்து வெளிக் கோட்டுக்குத் தாவிக்கூட அடிக்கலாம். அவன் கால்கள் கோட்டைவிட்டு விலகியிருந்தால் அவன் பிடித்தது செல்லாது. விளையாடிப் பாருங்கள்! பிறகுதான் இதன் அருமை தெரியும்.

எழுத்திலே படங்கள்

1. பண்டித நேரு. 2. கவி பாரதி.
3. லோகமான்ய திலகர். 4. போஸ்.

ஜக்கு

துப்பறிகிறன் - - - - - 'ஆர்வி'

ஜக்குவுக்குப் பெரிய யோசனையாகப் போய் விட்டது. ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டான். இந்த மாதிரி சமயங்களில் வேறு ஒரு பையனுக இருந்தால் என்ன செய்வான்? 'அருணுசலமுமாச்சு, அவர் ரகசியமுமாச்சு' என்று தலை தெறிக்க ஓடிப் போயிருப்பான். இன்னும் கொஞ்சம் தைரியசாலியாக இருந்தால், "சார், சார்! அந்த ரகசியத்தை வேறு எங்கேயாவது போய்ப் பேசலாம். இங்கே வேண்டாம்" என்று கிளம்பி யிருப்பான்.

ஜக்குவோ துணிச்சலான பேர்வழி. சாகஸம் நிறைந்த துணிகரச் செயல்கள் செய்ய வேண்டும் என்ற ஆசை கொண்டவன். ஆகவே இப்பொழுதுதான் அவன் மூளை அதி தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. இந்தச் சாக்கில் உள்ளே போய்ப் பார்த்தால் என்ன என்று அவனுக்குத் தோன்றிற்று. ஏதாவது ஆபத்தில் போய் மாட்டிக்கொண்டால் என்ன செய்வது என்ற யோசனையே அவனுக்கு உதிக்கவில்லை. எதையும் சமாளித்துவிடலாம் என்ற தைரியத்தின்மேலேயே அவன் யோசனை ஓடிற்று.



ஆனல் அருணுசலமோ, "நீ யோசிப்பதைப் பார்த்தால் எனக்கு ஒரு மாதிரியாய் இருக்கிறது. நமக்கு என் இந்த வீண் வம்பெல்லாம்? நாம் வெளியே போய்விடுவோம்" என்ருர்.

"நான் யோசிக்கிறதைப் பார்த்தால் உங்களுக்கு எந்த மாதிரி இருக்கிறது, அதைச்

சொல்லுங்களேன் முதலில்'' என்றான் ஜக்கு.

''மேலே யாரோ இருக்கிறார்கள் என்றுதானே நீ நினைக்கிறாய்?''

''ஆமாம்; அப்படித்தான் நினைக்கிறேன்.''

''நான் அப்படி நினைக்கவில்லை.''

''ஏன்?''

''இரண்டு வருஷமாகக் காலியாகக் கிடக்கிறது. ஏதாவது மர நாய் அல்லது பூனை இருந்து எதையாவது உருட்டித் தள்ளியிருக்கும். நமக்கு என்ன?''

''இதிலே ஏதோ விசேஷம் இருக்குன்னுதான் எனக்குப் படறது. நமக்கு என்ன என்பது ஒரு பேச்சா? எனக்கு அப்படிப் போகப் பிடிக்கல்லே.''

''பின்னே என்ன செய்யப் போகிறாய்? எப்படி உள்ளே போவாய்?''

''அதை நான் எப்படிச் சொல்றது?''

அருணாசலத்தின் முகம் சிறிது வாட்டமடைந்தது. ''இதோ பார், ஜக்கு! முதல்லேயிருந்து என் பேரிலே உனக்கு என்னவோ சந்தேகம். அதனாலே இப்படிப் பேசறே. ஆனா—''

அவர் பேசி முடிப்பதற்குள் மறுபடியும் மேலே தடார் என்று அடிபட்டதுபோலச் சத்தம் கேட்டது. ஜக்குவுக்கு அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. இரண்டே தாவாகப் படிகளைத் தாண்டி, கதவிலிருந்த பூட்டைக் கழற்றி வீசி எறிந்தான்.

இதைப் பார்த்ததும் அருணாசலம் திகைத்துப் போனார். மந்திரத்தினால் பூட்டுத் திறந்து கொண்டதோ என்று ஆச்சரியப்படுபவர்போல நின்றார்.

''ஹலோ, மிஸ்டர் அருணாசலம். நீங்களும் வரதானால் வரலாம். இல்லாட்டா நான் வரும் வரைக்கும் இங்கேயே இருக்கலாம். உங்க சௌகரியம்'' என்று சொல்லிவிட்டு ஜக்கு உள்ளே நுழைந்தான்.

அருணாசலம் திக்கித் திணறி, ''ஜக்கு, ஜக்கூ! வேண்டாம், வேண்டாம்'' என்று தடுத்துச் சொல்லிக்கொண்டிருந்ததை அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

பங்களாவுக்குள் அநேகமாய் எல்லா அறைகளுமே வெறிச்சென்றுதான் கிடந்தன. மாடிப் படிக்கட்டு எங்கே என்று ஜக்கு ஒவ்வோர் இடமாகப் பார்த்துக்கொண்டே போனான். திடீர் என்று ஓர் இடத்துக்கு வந்ததும் அவன் கால்கள் டப்பென்று நின்றன. எதிரே சுவரில் இரண்டு பட்டாக்கத்தி உறைகள் மாட்டியிருந்தன. ஆனால் அவற்றில் கத்திகளை மட்டும் காணோம். மாறனேரி ஜமீன்தார் கத்திச் சண்டையில் பிரியமுடையவர் போலிருக்கிறது என்று அவன் எண்ணிக் கொண்டான். பக்கத்தில் ஒரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னலுக்குக் கம்பிகளே இல்லை. அதில் தாராளமாய் ஒருவன் நுழைந்து போகலாம்.

ஜக்கு தைரியத்துடன் அந்த ஜன்னலருகே போய் ஏறி வெளியே எட்டிப் பார்த்தான்.

அது பங்களாத் தோட்டத்துப் பக்கம். அங்கிருந்து தோட்டத்தின் ஒரு பகுதிதான் தெரிந்தது. ஜன்னலை ஒட்டினாற் போலக் கீழே இறங்குவதற்கு வசதியாய் ஒரு கொய்யா மரம் இருந்தது. ஜக்கு ஜன்னலை விட்டுத் திரும்பிய சமயத்தில் பின்னால் ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். அது வேறு ஒன்றுமில்லை. கொய்யா மரத்திலிருந்து ஓர் அணில்தான் 'கீ, கீ' என்று கத்திக்கொண்டே தத்திப் பாய்ந்து ஓடியது.

சங்கர்...

ஜக்கு அந்த இடத்தை நன்றாக மனத்தில் பதிய வைத்துக்கொண்டான். பிறகு சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே வரும்போது மாடிப் படி அவன் கண்ணில் பட்டது. மெதுவாகப் பூனைபோல அவன் படிகளில் ஏறினான். மேல் கதவுகள் சாத்தியபடியே இருந்தன. உள்ளே யாரோ கசமுச வென்று பேசும் குரல் கேட்டது. பேச்சு மட்டும் தெளிவாகக் கேட்கவில்லை. ஜக்குவுக்கு முதலில் கொஞ்சம் திக்கென்று தான் இருந்தது. பூனையோ மரநாயோ அல்ல என்பது நிச்சயப் பட்டுவிட்டது. யாரோ மனிதர்கள் இருக்கிறார்கள்! என்னவோ பேசுகிறார்கள்! அவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்களோ, என்ன செய்கிறார்களோ, ஒருவருக்கும் தெரியாது!

இவர்களுக்கும் இந்த அருணாசலத்துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? இல்லாவிட்டால் அவனைப் போக வேண்டாம், போக வேண்டாம் என்று அவர் ஏன் தடுக்க வேண்டும்?

ஜக்கு பின்னால் திரும்பிப் பார்த்தான், ஒரு சமயம் அவனை அருணாசலம் பின் தொடருகிறாரோ என்று. அப்படி ஒன்றும் வருவதாகத் தெரியவில்லை. அவன் கையிலோ தற்காப்புக்கு ஒருவிதச் சாதனமும் இல்லை. உள்ளே தைரியமாய் நுழைவதா, வேண்டாமா? இதற்குள் அருணாசலம் மேலே இருப்பவர்களுக்கு அவன் வந்திருப்பதை எப்படியாவது அறிவித்திருந்தால் என்ன செய்வது? எப்படி நடந்துகொள்வது?

ஜக்குவினால் அவ்வளவு சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. மெதுவாகக் கதவைத் தள்ளிப் பார்த்தான். கதவு எதிர்பார்த்தபடியே உட்புறம் தாழிட்டிருந்தது. சாவி

போட்டுத் திறக்கும் ஓட்டை வழியாகப் பார்த்தான். ஒன்றுமே தெரியவில்லை. ஆனல் கசமுசவென்று மெல்லிய சந்தடியைத் தவிர அஞ்சில்லறைகளின் சத்தமும் நடு நடுவே கேட்டது. அவனுக்கு மேலும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தப் படிக்கட்டு ஓரமாய் ஒருவன் ஒண்டிக்கொள்ளக் கூடிய இடம் இருந்தது. எங்கிருந்தோ காற்று ஜில்லென்று வீசியது.

இவ்வளவு அமைப்பான ஒரு பங்களாவில் அவன் இதுவரை நுழைந்ததே யில்லை. பார்த்ததும் இல்லை.

'கிளிக்' என்று சத்தம் வந்தது. உடனே ஜக்கு தாவிப் பாய்ந்து அந்த ஒதுக்குப் புறமான இடத்தில் ஒண்டிக் கொண்டான். திறந்த கதவு அவனை வெளித் தெரியாதபடி மூடிவிட்டது. படிக்கட்டில் யார் இறங்குகிறர்கள், யார் உள்ளே போகிறர்கள் என்பதைப் பார்க்கமுடியாமல் அவனை மறைத்து விட்டது கதவு. தெய்வாதீனமாக இந்தக் கட்டத்தில் அவன் தப்பித்ததற்குச் செங்கழுநீர்ப்பிள்ளையாரை மனசுக்குள் வேண்டிக் கொண்டு தலையில் குட்டிக் கொண்டான். அவனுடைய கைக் கடிகாரம் ஆறு மணியைக் காட்டியது.

ஒரு நிமிஷமாயிற்று; இரண்டு நிமிஷமாயிற்று.

ஜக்கு கதவுக்குள்ளிருந்து பின்புறம் பார்த்தான். தேன் கூட்டு அறையைப் போன்ற ஜன்னல் அது. அங்கிருந்து பார்த்தால் ஆகாயந்தான் தெரியுமேயொழிய, கீழே என்ன இருக்கிறது, அது எந்த இடம் என்பது ஒன்றும் தெரி

யாது. ஆனால் காற்று ஜிலுஜிலுவென்று அங்கிருந்துதான் வந்தது.

மறுபடியும் 'கிளிக்' சத்தம்.

கதவு சாத்திக்கொண்டு விட்டது. ஜக்கு சுவரோடு சுவராய் ஒண்டிக்கொண்டு மூச்சுக்கூட விடாமல் நின்றான். முன்பிருந்த வெளிச்சம் இப்போது இல்லாமல் ஒரே இருள் கவிந்ததுபோல் இருந்தது. அதனால் கதவை வெளியிலிருந்து சாத்தினார்களா, உள்ளிருந்து சாத்தினார்களா என்பது அவனுக்குத் தெரியவில்லை. வெளியிலிருந்து சாத்தியிருந்தால் சீக்கிரத்தில் அவன் இருப்பதைக் கண்டுகொண்டு விடலாம். அப்படி ஒன்றும் நேரவில்லை. ஆனால் படிக்கட்டுகளில் யாரோ மெதுவாக நடந்துசென்றது மட்டும் அவனுடைய கூர்மையான காதுக்குக் கேட்டது.

கீழே படிக்கட்டை விட்டுத் திரும்பியதும் உள்ள ஜன்னலிலிருந்து அந்த அணில் மறுபடியும் 'கீ, கீ' என்று கத்திக்கொண்டிருந்தது.

வெகு நேரம்வரையில் பேச்சுக்குரலோ சந்தடியோ ஒன்றும் கேட்காததால் ஜக்கு வெளியில் வந்தான். கதவைத் தொட்டதுமே அது கையோடு திறந்துகொண்டு வந்தது. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக்கொள்ள ஜக்கு அறையினுள் காலடி எடுத்து வைத்தான். எங்கும் நிச்சப்தம். தரையெல்லாம் சுத்தமாய் வழவழப்பாய் இருந்தது. அஸ்தமித்துவிட்டபடியால் இருள் சூழ்ந்திருந்தது. நீண்ட ஹாலில் மட்டும் வெளி வெளிச்சம் கொஞ்சம் மங்கலாய்த் தெரிந்தது. ஹாலின் கோடியில் ஒரு மேஜை நாற்காலி எல்லாம் கிடந்தன.

ஜக்குவுக்கு அதிக நேரம் அங்கே நிற்கப் பயமாய் இருந்தது. மாடியிலுள்ள அறைகளையும் அமைப்பையும் நின்று கவனித்துப் பார்க்க அவனுக்கு அவகாசமில்லை. இனி இங்கே தாமதிப்பது அசட்டுத்தனம் என்று அவனுக்குத் தோன்றிற்று. மேலே வெளிப்புறத்தின் ஓரமாய் வந்து எட்டிப் பார்த்தான். போர்ட்டிகோ தெரிந்தது. ஆனால் அருணாசலத்தை அங்கே காணவில்லை. கீழே மறைவில் நிற்கிறாரோ என்னவோ என்று திரும்பினான்.

கதவைத் தாண்டி வெளியே வரும் சமயத்தில் அவன் காலில் ஏதோ இடறியது. ஜக்கு திடுக்கிட்டான். அது வேறு ஒன்றும் இல்லை. சாவிக்கொத்து! அதை எடுத்துப் பைக்குள் திணித்துக் கொண்டான். தடதடவென்று கதவைச் சாத்திக்கொண்டு படிகளில் கீழே இறங்கி வந்தான். நன்றாக இருட்டிவிட்டது. ஆயினும் அந்த ஜன்னல் ஓரமாய் வந்ததும் நிமிர்ந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! அந்த உறைகளில் இப்போது பளபள வென்று இரண்டு கத்திகள் மின்னின.

'இவை எப்படி இங்கே வந்தன?' என்று ஜக்குவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அருணாசலத்திடம் பேசவேண்டியதை ஒரு நிமிஷத்தில் முடித்துக்கொண்டு இன்னொரு நாள் சாவகாசமாய்த் தகுந்த துணையுடன் வரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

ஜன்னலில் எட்டிப் பார்த்த போது மறுபடியும் அந்த அணில் கொய்யாமரத்திலிருந்து வெளிவந்து 'கீ கீ' என்று கத்தியது. இது இந்தத் தடவை அவன் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. 'இது ஏன் இப்படி அடிக்கடி கத்துகிறது? இதை யாராவது வளர்க்கிறார்களோ?' என்றெல்லாம் நினைத்தான்.

மளமளவென்று அவன் வெளியில் வந்து பூட்டைத் தேடி எடுத்துக் கதவில் மாட்டினான். திரும்பிப் பார்த்தால் அருணாசலத்தைக் காணவேயில்லை.

''சார், சார்!'' என்று இரண்டு முறை கூப்பிட்டான்.

பதிலில்லை. அருணாசலம் அங்கே இருந்தால்தானே? தெரு விளக்குகள் எல்லாம் பளிச்சென்று எரிய ஆரம்பித்தன. பங்களா மட்டும் இருண்டு கிடந்தது.

ஜக்கு, 'இனி நிற்பதில் பிரயோசனமில்லை. நாளை ஞாயிற்றுக்கிழமைதானே? கொஞ்சம் முன்னதாகவே வந்து இந்த அருணாசலத்தைக் கவனித்துக் கொள்ளலாம்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு கேட்டை நோக்கி நடந்தான்.

திடீரென்று பங்களா காம்பவுண்டுக்கு அருகில் உள்ள மரத்திலிருந்து 'கீ கீ' என்ற சத்தம் கேட்டது.

'மாறனேரி பங்களா என்பதற்குப் பதில் அணில் பங்களா என்றுதான் இதைச் சொல்லவேண்டும்' என்று எண்ணிக்கொண்டிருந்த போதே, ''நில்லப்பா!'' என்று யாரோ சொன்னார்கள்.

ஜக்கு திரும்பினான். அருணாசலம்தான்! (தொடரும்)

நீங்களே செய்யலாம்:



யானையும் குதிரையும்

தேவையானவைகள் (யானைக்கு) நீளமாயுள்ள மெல்லிய நூல் கண்டுக் குழாய் நாலு; பெரிய உருண்டையான நெட்டித் துண்டு ஒன்று; தாமரைத் தண்டு போன்ற அட்டைக் குழாய்; இரண்டு அட்டைத் துண்டுகள். (குதிரைக்கு) உருண்டையாய் உள்ள நெட்டித் துண்டு; கம்பளி நூல் கொஞ்சம்; நாலு சதுரக் குச்சிகள்; அட்டை; வர்ணங்கள்.

இவற்றைச் செய்யவேண்டுமானால் படத்தை நன்ருகக் கவனிக்க வேண்டும். யானையைப்போலத் துதிக்கை, தந்தங்கள், காது இவற்றை வெட்டிப் பொருத்துவதில்தான் அழகு இருக்கிறது.

அதற்குள்ள வர்ணங்களைப் பூசிவிட்டால் போதும். குதிரையும் அப்படியே. நெட்டியைப் பிளந்துகொண்டு அதில் கழுத்தைச் செருகிவிடவேண்டும். வாலுக்குக் கம்பளி நூல். நாலு சதுரக்குச்சிகளைக் கால்களாகச் செய்வது ஒன்றும் பிரமாதமில்லை.

இதோ நவராத்திரி வரப்போகிறது. நீங்களே செய்த பொம்மைகள் கொலுவில் இருந்தால் எவ்வளவு பெருமையாக இருக்கும்!

பெட்டைக்கோழி

எம். கே. சுந்தரம்

கொல்லையில் மேயுது
பெட்டைக்கோழி—உள்ளே
கூண்டில் உறங்குது
குஞ்செல்லாம்,
கொக்கரக்கோ என்குது
பெட்டைக்கோழி—உடன்
குதித்து வருகுது
குஞ்செல்லாம்.
குப்பையைச் சீய்க்குது
பெட்டைக்கோழி—இரையைக்
கூடித் தின்குது
குஞ்செல்லாம்.
பருந்து வானிலே
போடுது வட்டம்—அங்கே
பயந்து ஓடுது
குஞ்செல்லாம்.
சிறகால் அணைக்குது
பெட்டைக்கோழி—உடன்
சிரித்து மகிழுது
குஞ்செல்லாம்

மெஸர்ஷ்மிட் கதை

'குமுதினி'

[நந்தகுமாருக்குப் பதினெரு வயது. அவன் தப்பி ரகுவுக்கு ஏழு வயது. இருவருக்கும அவர்களின் அம்மா பலவிதக் கதைகள் சொல்லுவாள்.]

நந்து:—'மெஸர்ஷ்மிட்' என்ருல் என்ன அம்மா?

அம்மா:—அதை எங்கே படித்தாய்?

நந்து:—இதோ, இந்த ஏரோப்ளேன் புத்தகத்தில் மெஸர்ஷ்மிட் பறந்து வந்தது என்று போட்டிருக்கிறதே!

அம்மா:—மெஸர்ஷ்மிட் என்பது ஒரு கெட்டிக்கார ஜர்மன் எஞ்சினீரின் பெயர். அவர் பல ஏரோப்ளேன்கள் செய்தார். அவைகளுக்கு அவருடைய பெயரையே வைத்து மெஸர்ஷ்மிட் 109', 'மெஸர்ஷ்மிட் 204' என்றெல்லாம் பெயரிட்டிருக்கிருர்கள். மெஸர்ஷ்மிட் விமானங்கள் மிகவும் உயர்ந்தவை. அவைகளைக்கொண்டுதான் ஹிட்லர் போலந்து, ஆஸ்ட்ரியா, பிரான்ஸ் எல்லாவற்றையும் ஜயித்தார்.

நந்து:—பின் ஏன் இங்கிலாந்தை ஜயிக்கவில்லை?

அம்மா:—சொல்கிறேன். முதலில் அந்த எஞ்ஜினீரின் கதையைச் சொல்கிறேன். ஜர்மனியில் பவேரியா என்ற மாகாணத்தில் ஒரு வியாபாரி இருந்தார். அவருக்கு இரண்டாவது பிள்ளை வில்லியம் மெஸர்ஷ்மிட் என்பவர். வில்லி என்று அவரை எல்லாரும் அழைப்பார்கள். வில்லிக்கு ஐந்து வயதாக இருக்கையில், அதாவது 1903-ஆம் வருஷத்தில் முதல் முதல் ஆகாய விமானங்கள் பறக்க ஆரம்பித்தன. இது பற்றி எல்லாரும் பேசிக்கொண்டிருப்பார்கள். வில்லிக்குத் தானும் பறக்கவேண்டும் என்று ரொம்ப ஆசை ஏற்பட்டுவிட்டது. 1909-ஆம் வருஷம் முதல் முதலாகப் பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்குக் கடலைத்தாண்டி விமானம் பறந்தது. வில்லி அப்பொழுதிலிருந்தே இறக்கை வாகனம் (Glider) தானே செய்து அவைகளில் ஏறி மலைச் சரிவுகளில் மலைமேலிருந்து கீழே பறந்து வருவது வழக்கம். நந்துவின் வயதுதான் அவருக்கு அப்போது. எவ்வளவு தைரியம் பார்த்தாயா? இறக்கைவாக

'கிளைடர்'

'ஸ்போர்ட்ஸ்'

னத்தை ஜாக்கிரதையாகச் சரியாக அமைப்பார். அசட்டுத்தனமாக இருக்கமாட்டார். இதெல்லாம் பார்த்து அவருடைய அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருமை.

வில்லிக்கு 12 வயதாக இருக்கும்போது ஹார்த் என்ற ஒரு கெட்டிக்கார இறக்கைவாகன விமானி இவர்கள் ஊருக்கு அருகில் இறக்கை வாகனம் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தினர். வில்லியின் அப்பா அவரிடம் தன் பிள்ளையை அழைத்துக்கொண்டுபோய், சிநேகம் பண்ணி வைத்தார். நல்ல ஆசிரியரும் நல்ல மாணுக்கரும் சேர்ந்தால் உயர்வு அல்லவா? அன்று முதல் அவர்கள் இருவரும் காந்தமும் ஊசியும்போல் ஆகிவிட்டார்கள். அவர்கள் பேசுவது, செய்வது, நினைப்பது, கனவு காண்பது எல்லாமும் பறப்பதுபற்றித்தான்.

1914–ஆம் வருஷம் ஜர்மானியரும் இங்கிலீஷ்காரரும் சண்டை போட்டார்களே, உங்களுக்குத் தெரியுமா? அப்போது ஹார்த் தம் தொழிற்சாலையை வில்லியிடம் கொடுத்துவிட்டு, சண்டைக்குப் போனர். 16 வயதுதான் வில்லிக்கு. இருந்தாலும் தொழிலை நன்ருக நடத்தி நிறைய லாபம் வருமாறு செய்துவிட்டார்.

சண்டை நடந்த நாலைந்து வருஷம் தமது படிப்பை நிறுத்தி இருந்த வில்லி, சண்டைக்குப் பிறகு மறுபடி கலாசாலையில் சேர்ந்து படித்து 25-ஆம் வயதில் எஞ்சினீர் பட்டம் பெற்றுர். எஞ்சினீருக்குப் படிக்க ஆரம்பித்தது முதற்கொண்டே இவர், 'வெறும் வாகனம் பயனில்லை; எஞ்ஜின்கொண்டு பறக்கும் விமானங்கள்தான் உயர்ந்தவை' என்று அவைகளைப்பற்றி எல்லாம் படித்துக்கொண்டும் யோசித்துக்கொண்டும் இருந்தார். எஞ்சினீர் பரீட்சை முடிந்ததும் ஹார்த்தின் தொழிற்சாலையைத் தான் வாங்கிக்கொண்டு, அதை ஏரோப்ளேன் செய்யும் தொழிற்சாலையாக மாற்றி மிக வேகமாகப் பறக்கும் ஏரோப்ளேன்களைச் செய்ய ஆரம்பித்தார்.

ரகு:—எப்படி? எப்படி ஏரோப்ளேன் பண்ணினர்?

நந்து:—உனக்குச் சொன்னுல் புரியாது, போ.

அம்மா:—படித்து, படித்து, இந்தமாதிரி அமைக்க வேண்டும், அந்தமாதிரி அமைக்க வேண்டும் என்று யோசித்து யோசித்துக் காகிதத்தில் 'பிளான்' எழுதுவார். பிறகு அந்தமாதிரி இரும்பை உருக்கித் தகடுகள் செய்து, எஞ்சின் செய்து, அதையெல்லாம் சேர்த்து முடுக்கி விமானம்



'பைட்டர்'



'பாம்பர்'

செய்வார். இவர் முதலில் 'ஸ்போர்ட்' விமானங்கள், சும்மா சந்தோஷமாகப் பறப்பதற்காகச் செய்தார். அவை ரொம்ப வேகமாய்ப் பறக்கும். எங்கெங்கே விமானப் பந்தயங்கள் இருந்தாலும் அங்கே ஒரு 'மெஸர்ஷ்மிட்' விமானம் இருக்கும். அது எல்லா முதல் பிரைஸ்களையும் வாங்கிக்கொண்டு போய்விடும். எல்லாவற்றுக்கும் முதலில் பறக்கும். பெர்லின் நகரத்திலிருந்து பாக்தாதுக்குப் பந்தயம். 'மெஸர்ஷ்மிட்-டைபூன்' ஜயித்தது. (டைபூன் என்றால் பெரும்புயல், சண்டமாருதம் என்று அர்த்தம்.) பாரிஸிலிருந்து ரோமுக்குப் பந்தயம்; 'மெஸர்ஷ்மிட்' ஜயித்தது. ஆல்ப்ஸ் மலைகளைச் சுற்றி வரும் பந்தயம்; 'மெஸர்ஷ்மிட்' ஜயித்தது என்று சதா மெஸர்ஷ்மிட் ஜயித்தது என்றே பத்திரிகைகளில் வரும்.

பிறகு அவர் சண்டை போடும் விமானங்கள் செய்தார். அவைகளுக்கு 'மெஸர்ஷ்மிட் 109' என்று பெயர். இங்கிலீஷ், பிரெஞ்சு, அமெரிக்க, ருஷ்ய விமானங்கள் எல்லாவற்றையும் விட இவை லேசாக இருக்கும், வேகமாகப் போகும். ஒரு மணிக்கு 350 மைல்கள் போகும். இந்தமாதிரி ஆயிரம் மெஸர்ஷ்மிட் வந்ததால் போலந்திலும் பிரான்ஸிலும் அவைகளை எதிர்க்கவே முடியவில்லை. அதனால் அவர்கள் தோற்றுவிட்டார்கள்.

நந்து:—இங்கிலீஷ்காரர்கள்?

அம்மா:—மெஸர்ஷ்மிட் விமானங்களில் ஒரே எஞ்ஜின்தான் அப்போது இருந்தது. அந்த எஞ்ஜின் நின்றுவிட்டால் விமானம் கீழே இறங்கவேண்டியதே. இங்கிலீஷ்காரர்கள் இரண்டு எஞ்ஜின் வைத்து விமானங்களும், முக்கியமாக வெடிகுண்டு போடும் பாம்பர்களும் செய்தார்கள்.

நந்து:—இவரால் அந்தமாதிரி செய்ய முடியவில்லையா?

அம்மா:—முடியாமல் என்ன? 1946-47-இல்தான் அமெரிக்கர்கள் 'ஜெட்' விமானங்கள் செய்தார்கள். ஆனால் 1939-ஆம் வருஷமே இந்தக் கெட்டிக்கார எஞ்சினீர் அதுபற்றியெல்லாம் யோசித்து, விமானம் செய்திருந்தார். 'மெ. 410' என்பது இரட்டை எஞ்சின் வைத்தது. அது சண்டையும் செய்யும்; வெடிகுண்டும் போடும். 'மெ. 262' என்பது 'ஜெட்' விமானம். அது மணிக்கு 465-மைல் வேகத்தில் மேலே ஏறும். 621-மைல் வேகத்தில் நேரே போகும். இது தவிர 'ராக்கெட்' விமானங்கள் வேறு செய்தார். அவை ஒரு செகண்டில் 10,000 அடி ஏறும். மூன்று செகண்டில் 30,000 அடி போய்விடும்.



'ஜெட்'



'ராக்கெட்'

ஆனால் ஜர்மன் அதிகாரிகளுக்குள் ஒருவருக்கொருவர் தகராறும் போட்டியும் வந்துவிட்டன. அதனால் இந்த விமானங்களை எல்லாம் நிறையச் செய்து யுத்தகளத்துக்குக் கொண்டுவரத் தாமதமாகிவிட்டது. அதற்குள் அமெரிக்கர்களின் 'பி. 21' 'பி. 29' என்ற வெடிகுண்டு விமானங்கள் வந்து ஜர்மானியரைத் தோற்கடித்துவிட்டன. வில்லி மெஸர்ஷ்மிட் இப்போது விமானம் செய்வதையே விட்டுவிட்டு, வேறு தொழில் செய்கிறாராம், பாவம்.

ரகு:—ஏன்?

நந்து:—என்ன ஏன் என்று சும்மா கேட்கிறாய்?

அம்மா:—ஜர்மனியில் ஒருவரும் விமானமே செய்யக்கூடாது என்று தடை செய்துவிட்டார்களாம். ருஷ்யாவிலிருந்து, பிரான்சிலிருந்து, சுவிட்சர்லந்திலிருந்து, அமெரிக்காவிலிருந்து, ஏன், நம்ம இந்தியாவிலிருந்து கூட, சிலர் வந்து அவரை, "எங்கள் ஊருக்கு வந்து விமானங்கள் செய்யுங்கள். உங்களுக்குப் பெரிய தொழிற்சாலை, அழகான பங்களா, நிறையப் பணம்-எல்லாம் கொடுக்கிறோம்" என்றார்களாம். ஆனால் அவர் "நான் ஜர்மனி தவிர வேறு ஒரு தேசத்துக்கும் விமானம் செய்ய மாட்டேன்" என்று சொல்லிவிட்டாராம். தாம் 1939-ஆம் வருஷமே கண்டுபிடித்த விமானங்களை ஜர்மனியில் நிறையச் செய்து இதர தேசங்களை தோற்கடிக்கவில்லையே என்று அவருக்கு ரொம்பக் குறை.

கெட்டிக்கார எஞ்சினீர்களாக இருக்கலாம். ஆனால் மற்றவர்களைக் கொல்வதற்காக விமானங்கள் செய்யக்கூடாது. யாரையும் நாம் கொல்லக்கூடாது.

ரகு:—ஏன்?

நந்து:—ஏன், ஏன், ஏன்?

ரகு:—நந்து அழகு காட்டுறான், அம்மா.

கால் போனால் என்ன ஆகும்?

1. காலுக்குக் கால் போனால் கடினமிது—ஆகும்
2. பாலுக்குக் கால் போக வாயிலுள்ள—ஆகும்
3. மாட்டுக்குக் கால் முறிய மாநீர்—ஆகும்
4. மாலுக்குக் காலேகப் போராடும்—ஆகும்
5. மானுக்குக் காலொடிய மாண்புள்ள—ஆகும்
6. தோளுக்குக் கால்நீங்கத் துன்புதரு—ஆகும்

1. கல். 2. பல். 3. மடு. 4. மல். 5. மண். 6. தேள்.

உல்லாச வெட்டுக்கிளி

'சேர்மசன்மா'

வெயில் ஜோராக அடித்தது. காற்று ஜிலுஜிலு வென்று வீசிக்கொண் டிருந்தது. தோட்டத்தில் நிறையப் புஷ்பச்செடிகள் பூத்துக் குலுங்கின. நந்தியாவட்டை, காசித்தும்பை, சரக்கொன்றை முதலிய விதம் விதமான வர்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கி, பார்ப்பதற்கு ரொம்ப அழகாயி ருந்தன.

இவ்வளவு சுகமான காலைவேளையில் யாராவது வேலை செய்துகொண் டிருப்பார்களா? நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்? உல்லாசமாக அந்த நந்தவனத்துக்குள் ஓடியாடி விளையாட மாட்டீர்களா? அப்படியேதான் அந்த வெட்டுக் கிளியும் செய்தது.

நீங்கள் வெட்டுக்கிளி பார்த்திருக்கிறீர்களா? அது ரொம்ப ஷோக்கான பேர்வழி. சாதாரணமாக நடக்கும்போதே தத்திக் குதித்துக்கொண்டே போகும். உல்லாசமாகச் சீட்டியடித்துக் கொண்டே யிருக்கும். அதைப் பார்த்தாலே மனசுக்கு உற்சாக மாயிருக்கும். அதற்கு மனசில் கொஞ்சங்கூடக் கவலையே கிடையாது.

அப்படிப்பட்ட வெட்டுக்கிளி ஊதாநிறமான காசித்தும் பைப் பூவைக் கண்டு சந்தோஷம் தாங்காமல், அதிலிருந்து தாவி மஞ்சள் நிறமான துலுக் கன் ஜவந்திப் பூவின் மேல் ஒரு 'ஹை ஜம்ப்' அடித் துக் குதித்தது. அப்படி அது குதிக்கும் போது கால் தவறி, பொத்தென்று



கீழே விழுந்தது. கீழே விழுந்தால் அதுக்குக் காயம் படும் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. அதனுடைய கால்கள் ஊசியைப் போல் மெல்லியதாகவும், ரப்பரைப் போல் வளையும்படியும் இருக்கும். கடவுள் வேண்டும் என்றே, அவைகள் உல்லாசமாய் இருக்கவேண்டும் என்றேதான் அவைகளை அப்படிப் படைத்திருக்கிறார் போல் இருக்கிறது.

அது அப்படித் தரையில் விழுந்தவுடன் கீழேயிருந்து, "யாரடா அவன், சோம்பேறி? கண்கூடத் தெரியவில்லையோ?" என்று ஒரு கீச்சுக்குரல் கேட்டது.

அதைக் கேட்ட வெட்டுக்கிளி குனிந்து பார்த்தது. அங்கே என்ன இருந்தது என்று நினைக்கிறீர்கள்? ஓர் எறும்பு தலையில் வெள்ளையாக ஒரு மூட்டையைத் தூக்கிக்கொண்டு தரையோடு தரையாக நடந்து போய்க்கொண் டிருந்தது.

வெட்டுக்கிளி குனிந்து பார்த்ததும் எறும்பு மறுபடியும் கேட்டது: "ஏனப்பா! கீழே ஜனங்கள் போகிறது தெரியவில்லையா? இப்படித் தடித்தனமாகக் குதிக்கிறாயே!"

"ஓஹோ! நீதான் என்னைச் சோம்பேறி என்று செல்லப் பேர் வைத்து அழைத்தாயோ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டது வெட்டுக்கிளி.

எறும்பு: ஆமாம். பொழுது போகாமல் வேலையாக இருக்கும் எங்கள் கூட்டத்தின் மேல் இப்படி விழுகிறாயே? இது நியாயமா?

வெட்டுக்கிளி: அதற்குப் பெயர் சோம்பேறித்தனமோ?

எறும்பு: ஆமாம். எங்களைப் பார். எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறோம்? எங்கள் ஜாதியே சுறுசுறுப்புக்குப் பேர் போனது.

வெட்டுக்கிளி: ஓஹோ! அப்படியா? நீங்கள் சுறுசுறுப்பாய் இருந்து எந்த மலையைப் புரட்டிவிட்டீர்கள்!

எறும்பு: மலையைப் புரட்டுவதென்ன! எங்கள் தலையில் பார்த்தாயா? அதுதான் எங்கள் ஆகாரம். அதை நாங்கள் வெயில் அடிக்கும்போதே கொண்டுபோய்ச் சேர்த்து வைப்போம். அப்புறம் மழை பெய்யும்போது கஷ்டம் இல்லாமல் சாப்பிடுவோம்.

வெட்டுக்கிளி; மழையே பெய்யாவிட்டால்-? உங்கள் வேலையெல்லாம் வீண் தானே?

எறும்பு: அப்போது இன்னும் சந்தோஷம். இன்னும் நிறைய ஆகாரம் சேர்ப்போம்.



அதைக்கேட்ட வெட்டுக்கிளி கட கட வென்று சிரித்துவிட்டுச் சொல்லும்: "போடா, பைத்தியக் காரா! மனிதனுக்கு ஆகாரந்தான் முக்கியம் என்று நினைக்கிருய்! ஆகாரம் எல்லாருந்தான் சாப்பிடுகிருர்கள். இதோ இந்த வெயில் எவ்வளவு ஜோராக அடிக்கிறது. எத்தனை அழகான புஷ்பங்கள்! நந்தியாவட்டை, சரக்கொன்றை, செவ்வந்தி! பச்சைப்பசேல் என்றிருக்கும் இந்தப் புல்தரையில் ஓடியாடி உல்லாசமாய் விளையாடுவதை விட்டுவிட்டுத் தலையில் மூட்டையைச் சுமந்துகொண்டு கழுதைமாதிரி போகிருயே! எது சுகம், நீயே சொல்லு!"

அதைக் கேட்ட எறும்பு சொல்லும்: "இன்றைக்குச் சுகத்தைப் பார்த்தால் நாளைக்குச் சந்தியில் நிற்கவேண்டும். கொட்டுகிற மழையில் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்து சாகவேண்டும். நீயே அந்தச் சுகத்தை அநுபவி!"

இந்தவிதம் சொல்லிக்கொண்டே வேகமாகச் சென்ற எறும்பைப் பார்த்து வெட்டுக்கிளி, "சுத்த அசடுகள்!" என்று சொல்லிவிட்டு இன்னேர் அந்தர் அடித்து ரோஜாப் பூவின் மேல் பாய்ந்து குதித்தது.

இப்படியிருக்கையில் வெயில் காலம் எல்லாம் போய் மழைக் காலம் வந்தது. வானம் அடைத்துக்கொண்டு எட்டு நாள் சேர்ந்தாற் போல் அடைமழை கொட்டிற்று. மழை ஜலம் எங்கே பார்த்தாலும் வெள்ளமாகப் பெருகி ஆடுமாடுகளையெல்லாம் அடித்துக்கொண்டு போயிற்று.

ஒரு நாள் கொஞ்சம் மழை நின்றது. வானத்தில் சூரியன் மெதுவாகத் தலையைக் காட்டினன். அப்போது நம்முடைய

எறும்பு தன்னுடைய வளையிலிருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தது. அது ஏன் அப்படி வந்தது என்றால் மழை நின்று விட்டதா என்று பார்க்கத்தான் வந்தது. பின் எட்டு நாளாகக் குகையைப்போல் இருக்கும் வளைக்குள்ளேயே அடைத்துக் கிடந்தால் மழை நின்றது எப்படித் தெரியும்? அதனால்தான் வந்தது.

வெளியே வந்ததும் அந்த மரத்தடியில் கீழே யாரோ படுத்திருப்பதைப் பார்த்ததும் கிட்டத்தில் வந்தது. அது வேறு யாரும் இல்லை. நம்முடைய பழைய வெட்டுக்கிளிதான் அப்படிக் கிடந்தது. அதற்கு எட்டுநாளாக மழையில் ஆகாரம் கிடையாது. அதனால் களைத்துப் போய் மயக்கம் போட்டு, எழுந்திருக்க முடியாமல் கிடந்தது.

அதைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்ட எறும்பு கேட்டது: "ஐயா! வெட்டுக்கிளியாரே! அன்று நான் ஆகாரம் கொண்டுபோகும்போது கழுதை என்றீர்களே? இப்போது தெரிகிறதா? என்னுடன் என் வீட்டுக்கு வாருங்கள். இரண்டு தோசையாவது சுட்டுத் தருகிறேன்!"

வெட்டுக்கிளி மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தது. பிறகு சற்றுக் கோபத்துடன் சொல்லும்: "ஏண்டா முட்டாள்! என்னைப் பிச்சைக்காரன் என்று நினைத்தாய்! அதுதான் இல்லை! என்றைக்கு இருந்தாலும் சாகப்போகிறோம். இருக்கிறவரையில் சந்தோஷமாக இருக்க வேண்டியது. இப்போது வெயில் அடித்தாலும் நான் ஷோக்காகச் சுற்றிக் குதிப்பேனே தவிர உன் மாதிரி மூட்டை தூக்கமாட்டேன்!"

அதைக் கேட்ட எறும்பு உதட்டைப் பிதுக்கிக்கொண்டே போய்விட்டது.

ஆகையினால் பிள்ளைகளே! உலகத்தில் சிலர் எப்போதும் உல்லாசமாகவே இருக்கிறார்கள் என்பதும், வேறு சிலர் பிறவியிலேயே உழைத்துக்கொண்டே இருக்கிறார்கள் என்பதும் இதனால் தெரிகிறது அல்லவா?

நம் பிரதம மந்திரி நேரு டில்லியில் விசாலமான மாளிகையில்தான் வசிக்கிறார். என்றாலும் எளிய வாழ்வு வாழ்கிறார். சிறு கட்டிலில் உறங்குகிறார். சாமானிய உணவு உண்கிறார். ஆனால், கண்ணாடிபோல் உட்புறமெல்லாம் தெரியும் ஒரு டெலிபோன் கருவி வைத்திருக்கிறார். அதில் மட்டும் அவருக்கு மிகவும் பிரியம்.

கப்பு கண்ட கனவு

'நீலம்'

நவராத்திரிக்கு இன்னும் பத்தே நாள் பாக்கி. கடைத்தெருவில் ஒரு மாதத்துக்கு முன்னடியே பளபளவென்று கண்ணைப் பறிக்கும் புதுச்சேரி, பண்ணுருட்டிப் பொம்மைகள் பெட்டி பெட்டியாக வந்து இறங்கியிருந்தன. மகாத்மாகாந்தி, நேரு, நேதாஜி பொம்மைகள் புதுமாதிரியில் இந்த வருஷம் வந்திருந்தன. வழக்கம்போல மகா விஷ்ணு, பரமசிவன், பார்வதி, ராமன், ஸீதை, ராதாகிருஷ்ணன் பொம்மைகளும் கடைகளில் இருந்தன. இவை தவிர கரடி, புலி, சிங்கம், நாய், பசு, எருது பொம்மைகளும், பழ தினுசுகளும் ஏராளமாக எல்லாக் கடைகளிலும் வரிசைப்படுத்தி வைத்திருந்தார்கள்.

நவராத்திரி நெருங்க நெருங்கக் கற்பகத்துக்கும் சுப்புவுக்கும் பரபரப்பாக இருந்தது. இருவரும் 5-ஆவது வகுப்பில் படித்துக்கொண் டிருந்தார்கள். வீட்டில் இருக்கும்போதும், பள்ளிக்கூடத்தில் இருக்கும் போதும் இந்த இரண்டு பேருக்கும் கொலுவைப்பற்றியே எண்ணம். பொம்மைகளைப்பற்றியே எப்போதும் யோசனை. கடைத்தெருவில் தையற்கடைகளில் வெட்டிப் போடும் வர்ணத் துணித் துண்டுகளையெல்லாம் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வரும் போது இருவரும் பொறுக்கி

எடுத்துக்கொண்டு வீட்டில் தங்கள் மேஜைப்பெட்டியில் பத்திரப்படுத்தி வைப்பார்கள். தங்கள் வீட்டுப் பொம்மை களுக்கு அந்தத் துணிகளால் உடுப்புச் செய்துபோட வேண் டுமே!

கற்பகத்தின் அம்மாவுக்குத் தன் குழந்தைகளின் உற்சாகத் தில் சந்தோஷந்தான். ஆனால் வழக்கப்படி இந்த வருஷமும் 'கப்பு'வும் 'சுப்பு'வும் புதிய பொம்மைகள் வாங்கவேண்டும் என்று நச்சரித்தால் என்ன செய்வது என்றுதான் அவள் கவலைப்பட்டாள். கொலுப் பெட்டியில் ஒன்றோடு ஒன்று மோதி உடைந்த இன்னும் சில பொம்மைகளைப் புதிதாக வாங்க வேண்டும். அவசியமான சாமான்களை வாங்கவே பணம் போதாத காலம். புதிய பொம்மைகளை எப்படி வாங்கு வது?

இந்த வருஷம் அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அதனால் அதி கச் செலவு. குழந்தைகளுக்கு இதெல்லாம் தெரிகிறதா?

ஆச்சு, நாளைக்கு நவராத்திரி ஆரம்பம். மச்சில் இருந்தது பொம்மைப் பெட்டி. கீழே அதை இறக்கி வைக்கும்படி கப்பு வும் சுப்புவும் அம்மா வைத் தொந்தரவு செய்தார்கள். "காரி யம் எல்லாம் முடிந்த பிறகு கீழே இறக்கி வைக்கிறேன்" என்றாள் அம்மா.

ஆனால் கப்புவுக்கு அவசரம் தாங்கவில்லை. "இப்பவே தாம்மா கீழே இறக்கணும்" என்று பிடிவாதம் பிடித்து அழுதாள். சுப்பு கையில் உள்ள ஊதலை விடாமல் ஊதிக் கொண்டே, "பொம்மைப் பெட் டியை இறக்கிவிட்டு மற்ற வேலை யைச் செய் அம்மா!" என்று கூத்தாடினாள். அம்மாவுக்கு எத்தனையோ வேதனை, பாவம்! அவளுக்குக் கோபம் வந்தது. அவர்கள் முதுகில், 'பளீர், பளீர்' என்று அறைந்துவிட்டு முதலில் போய்ப் படுக்கையில் படுத்துத் தூங்கும்படி கண்டித்தாள். கப்பு விசித்தபடியே கீழே ஒரு பாயில் படுத்துக்கொண்டாள். தூக்கம் பிடிக்காத சுப்புவும் வேண்டாவெறுப்பாக அவள் பக்கத்திலேயே ஊதலைக் கையில் வைத்துக்கொண்டு படுத்தாள். இரண்டுபேருக்கும் மேலே மச்சில் இருந்த கொலுப் பெட்டி தெரிந்தது. இடுக்குகளின் வழியாகப் பொம்மைகளின் வர்ணம் மின் சார வெளிச்சத்தில் கண் ணுக்குத் தெரிந்தது. உடை



யாமல் இருப்பதற்காகப் பொம்மைப் பெட்டியில் அடைத்திருந்த வைக்கோலும் காகிதமும் தென்பட்டன. கப்பு அதைப் பார்த்தாள்; அழுகை நின்று ஆச்சரியம் ஏற்பட்டது. உடனே அவள் சுப்புவைக் கூப்பிட்டு, "அதோ பாத்தியா! பொம்மை தெரியறது. அது தான் ஜவான் தலை. பக்கத்திலே கறுப்பா இருக்கு, பாரு; அது வியாபாரியின் வயிறு! சிவப்பாத் தெரியறதே?" என்று சுப்புவுக்குச் சுட்டிக்காட்டினாள். சுப்புவும் கண்களை அகல விழித்து ஆச்சரியத்தோடு பொம்மைப் பெட்டியைப் பார்த்தாள். "பொம்மைகள் கால் ஒடிந்தும் கையொடிந்தும் இருக்குமே!" என்றாள் கப்பு. அவளுக்கு அதே ஞாபகமாக இருந்தது. முதலில் சுப்புவுக்குத் தூக்கம் வந்தது. கப்புவுக்கும் தூக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வந்தது. ஆனால் அவள் அதைக் கலைத்துக்கொண்டு கண்விழித்திருக்க முயன்றாள். கொட்டாவி விட்டாள். சோம்பல் முறித்தாள். கடைசியில் பொம்மைப் பெட்டி நினைவோடேயே கண் அயர்ந்தும் போனாள். கண்மூடிப் பத்துப் பதினைந்து நிமிஷங்கள்தான் இருக்கும். அவள் காதில் யாரோ சிலர் பேசுவது கேட்டது.

முதலில் கொலுப் பெட்டியிலிருந்து நாய் எழுந்து நின்றது. மூஞ்சியில் காயத்தோடு அங்கே நின்ற பூனையைப் பார்த்தது. "நான்தான் அப்பவே சொன்னேனே! கேட்டியா? திருட்டுத்தனமாப் பாலைக் குடிச்சா அப்படித்தான் மூஞ்சியே எரிஞ்சுபோகும். இனிமே அப்படிப் பண்ணாதே?" என்று எச்சரித்தது. இதைக் கேட்ட பூனைக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "ஏ நாயே! உன் வாலை ஒட்ட நறுக்கினதை மறந்துட்டியோ? எனக்கு உபதேசம் செய்ய வந்துட்டியே!" என்று சீறியது.

நாய் தன் வாலைத் திரும்பிப் பார்த்துக்கொண்டது. ஆமாம்! அதன் வாலைக் காணவில்லை. அது அறுந்துபோயிருந்தது! இதை அறிந்த நாய்க்கு வெட்கமாகப் போயிற்று. திடீரென்று

பெட்டியின் வேறு பாகத்தில் ஒரு கூக்குரல் கேட்டது. "பிடி! பிடி! குத்திவிட்டான்! அதோ ஓடறான்!" என்ற சத்தம். வியாபாரம் செய்ய உட்கார்ந்திருந்த ஒரு கடைக்காரரை யாரோ வயிற்றில் குத்திவிட்டார்களாம். குற்றவாளியைப் பிடிக்கப்போன ஜவான்களில் ஒருவனைக் கழுத்தை வெட்டி விட்டார்கள். இன்னொரு ஜவானுக்குக் காலும் கையும் போய்விட்டன. வயிற்றில் காயத்தோடு வியாபாரி உட்கார்ந்தபடியே மூர்ச்சித்திருந்தார்! அவருக்குக் கொஞ்ச தூரத்தில் தலை வேறாகவும் உடல் வேறாகவும் ஒரு ஜவான் மாண்டு கிடந்தான். கொஞ்ச தூரத்தில் பழம், காய்கறி விற்கும் கடையில் ஒரே கலவரமாக இருந்தது. பசு மாடு ஒன்று காய்கறித் தட்டை இழுத்துத் தின்றது. இந்தச் சத்தத்தைக் கேட்ட முதலாளி மாட்டைக் கழியால் அடிக்கவே மாட்டின் கொம்பு முறிந்துவிட்டது. மாடு உடனே பூசனிக்காய்களை நோக்கிப் பாய்ந்தது. பல காய்களைக் கொம்பால் குத்தித் தள்ளிப் பொத்தலை உண்டுபண்ணி வெளியே உருட்டிவிட்டு ஓடியது. இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தது கத்திரிக்காய். அது தன் கால்களை ஊன்றிக்கொண்டு எழுந்து நின்றது! ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "ஏ பொத்தல் பூசனிகளே! உடல் பருமனாக இருப்பதைக் கொண்டு ஊரையே ஏமாற்றினீர்கள். உங்கள் வாழ்வு எவ்வளவு நாளைக்கு? அந்த மாடு சரியான



படி உங்கள் கர்வத்தைத் தொலைத்துவிட்டது!" என்று இறுமாப்புடன் பேசியது.

கண்களில் தாரை தாரையாக நீர் பெருகிய பூசனிகளுக்கு எரிச்சல் ஒரு பக்கம், ஏமாற்றம் ஒரு பக்கம். "ஏய் சொத்தைக் கத்திரியே! உன்னையும் உன் கோஷ்டியாரையும் வாலை நறுக்கிச் சட்னியாகச் செய்கிறார்கள். அப்படி இருக்கும்போதே இந்தத் திமிர் இருக்கிறதே! இன்னும் நீங்கள் சரியான நிலையில் இருந்தால் என்ன என்ன பேசுவீர்களோ!" என்று அவற்றில் ஒன்று பதிலுக்குப் பதில் சொல்லியது. இந்தத் தகராறைத் தீர்த்துச் சமாதானம் செய்ய முந்திரிப்பழத்திலிருந்த ஒரு கொட்டை முன்னுக்கு வந்தது!

"அதோ பக்கத்தில் நடந்ததைப் பாருங்கள். இந்தப் பஞ்ச காலத்திலும் தன்னுடைய சொந்த லாபமே முக்கியமென்று எண்ணி அதிக விலைக்குச் சாமான்களை விற்றான் தொந்தி வியாபாரி. அவன் கதியைப் பாருங்கள். ஏதாவது தங்களுக்கு வரும்படி வரும் என்ற கெட்ட எண்ணத்தோடு போன ஜவான்கள் கதியையும் பாருங்கள். திருட்டுக் குணமும் சுயநலமும் அதிகரித்த பூனையின் மூஞ்சியை அடுத்தபடியாகப் பாருங்கள். அது சுட்டுப் புண்ணாகி நிற்கிறது. நீங்களும் ஒருவரைவிட ஒருவர் பெரியவர் என்ற அகம்பாவத்தோடு நெடு நாளாகச் சச்சரவு செய்து வந்தீர்கள். அவரவர்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து உண்மையோடும், அகம்பாவம் இல்லாமலும், ஒற்றுமையாகவும் நடந்தால்தான் சுகமாக வாழ முடியும். அதோ, அங்கே பாருங்கள். மகாத்மாஜி நமக்குச் சத்திய வாழ்க்கையைச் சுட்டிக் காட்டி நிற்கிறார்" என்று உபதேசம் செய்து முடித்தது. உடனே எங்கும் ஒரே நிச்சப்தம் ஏற்பட்டது. கப்பு கண்ணைத் திறந்தாள். அவ்வளவும் கனவு! அவ்வளவையும் அம்மாவிடம் தெரிவித்தாள்.

அம்மா அன்று மாலையே கொலுப் பெட்டியைக் கீழே இறக்கினாள். கப்புவும் சுப்புவும் பெட்டியை ஆவலோடு பார்த்தார்கள்.

என்ன ஆச்சரியம்! கனவிலே முந்திரிக்கொட்டை குறிப்பிட்ட காந்தி, நேரு, சாமிகள் ஆகிய பொம்மைகளைத் தவிர, மற்றப் பொம்மைகளுக்கெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் குறைபாடுகள் இருந்தன. வியாபாரிக்கு வயிற்றில் ஓட்டையும் விரிசலும் கண்டிருந்தன. ஜவானுக்குத் தலையைக் காணவில்லை. பூனை மூஞ்சி கரிந்து போயிருந்தது. நாய்வால் அறுந்து இருந்தது! பூசனியில் பொத்தல். மாட்டுக்குக் கொம்பு ஒடிந்திருந்தது. இவற்றையெல்லாம் கனவில் கண்டபடியே காண நேர்ந்தபோது, கப்புவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "அம்மா, அம்மா, புதுப் பொம்மையே வேண்டாம், அம்மா! இருக்கிற நல்ல பொம்மைகளே போதும்" என்று அம்மாவிடம் கூறினாள்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(J) 67. ஜயலக்ஷ்மி, G., வள்ளிய சாலை. 68. ஜம்பகவல்லி, M., மேலப்புதூர். 69. ஜம்பகவல்லி, M., திருவள்ளூர். 70. ஜயலக்ஷ்மி, G., சென்னை-18. 71. ஜயலக்ஷ்மி, S., சாந்தாபாய், சென்னை-3. 72. ஜயராமன், G., சரோஜா, சென்னை-11. 73. ஜயராமன், பாமா, ராமசாமி, S. K., மயிலாப்பூர்.

(K) 82. கிருஷ்ணமூர்த்தி, R., மயிலாப்பூர். 83. கிருஷ்ணன், G., மயிலாப்பூர். 84. கிருஷ்ணகுமார், மங்களம், J., இடப்பாடி. 85. கிருஷ்ணமூர்த்தி, R., கள்ளக்குறிச்சி. 86. கிருஷ்ணவேணி, V.R., ஸ்ரீரங்கம். 87. கண்ணன், R., குடியாத்தம். 88. கந்தசாமி, P., வரகூர். 89. கண்ணன், நடராஜன், P., கொழும்பு-14. 90. கறுப்பன் செட்டி, D., திருச்செங்கோடு. 91. காவிச் செல்வன், கொழும்பு-13. 92. கம்பரேசுவரன், C. M., கோயம்புத்தூர். 93. கண்ணன், R., மேட்டூர் அணை. 94. கண்ணம்மாள், R., கரூர். 95. கமலா, S. கல்கத்தா-29. 96. கண்ணன், சுதா, மேட்டூர் அணை. 97. கருணாநிதி, M., பெங்களூர்- 1. 98. கந்தசாமி, M., துரைசாமி, ஆறுமுகம், பல்லடம். 99. கருணானந்தன், பேபி, சூளை-சென்னை. 100. கனகவல்லி, S., கிழப்பாவூர். 101. கனகலக்ஷ்மி, ராமநாதன், R., ஆத்தூர். 103. கற்பகவல்லி, புவனேசுவரி, R., கொடுமுடி. 104. கண்ணபிரான், K., பார்த்தசாரதி, சென்னை 1. 105. கனகராஜி, V. C., கோலார் தங்கவயல். 106. கந்தசாமி, T., சாணிக்குளம். 107. கருப்பையா, சேதுராமன், நாச்சியப்பன், சோமசுந்தரன், தர்மராஜன், V. E. K.R., கொழும்பு. 108. கொரயா ஓதுவார், புதுவை. 109. கௌசல்யா, M. S., திருவல்லிக்கேணி. 110. கௌசி, P., கூனூர். 111. கபீர்தாஸ், புதுவை. 112. கிருஷ்ணமணி, N., சென்னை-17. 113. குப்புசாமி, M., தாரமங்கலம். 114. கலீல், A. K., உடுமலைப்பேட்டை. 115. கோகிலம், K., பாக்கியலக்ஷ்மி, P. N., கோட்டயம். 116. கோதண்டராமன், K., கானாடுகாத்தான். 117. கல்யாணசுந்தரம், N. P., கும்பகோணம். 118. கல்யாணி, S., பம்பாய்-19. 119. கல்யாணசுந்தரம், K., புதுக்கோட்டை. 120. கல்யாணம், G., வடசருக்கை. 121. குப்புசாமி, P. K., ப. க. புதூர். 122. குமாரசாமி, N.V., தொல்புரம். 123. குப்புசாமி, N. V., சென்னை-17. 124. குமரப்பன், முத்து, P. R., புதுக்கோட்டை. 125. குப்புசாமி, T. K., திருச்செங்கோடு. 126. குளத்து ஐயர், A., நாகர்கோயில். 127. கார்த்திகேயன், D., ராமநாதபுரம். 128. காந்தலக்ஷ்மி, T. D., பெங்களூர் கன்டோன்மெண்ட். 129. காமு, K. K., சேது, மதுரை. 130. காதர் மொஹைதீன், S. M., பேட்டை. 131. காசிராஜன், K., விருதுநகர். 132. காளிதாஸ் பிரபாகர், பிருத்விராஜ், K.S. கல்கத்தா. 133. காளிதாசன் A.S.Y., சிவகாசி. 134. காசிநாதன், S., கோனேரிராஜபுரம். 135. காளியப்பன், V., ஆண்டிப்பட்டி 136. கார்த்தியேசு, N., கொக்குவில். 137. காந்திமதிநாதன், M., திசையன்விளை. 138. காஸிம் A. I. M., கொழும்பு. 139. காதர், K. M. A., சென்னை-5. 140. கருப்பையா, N., ஜம்புலிபுத்தூர். 141. கன்னையா, R., ஆண்டிப்பட்டி. 142. கமலா, R., விசுவநாதன், நெல்லிக்குப்பம். 143. கமலக்

கண்ணன், A., வாலாஜாபாத். 144. கண்ணன், K., சீனு, புதுடில்லி. 145. கண்ணன் S., கூனூர். 146. கனகரத்னம், R., தெல்லிப் பழை. 147. கந்தமூர்த்தி, V., வண்ணார்ப்பண்ணை. 148. கருப் பண்ணன், R., பழனி. 149. கருப்பு சாமி, P., ஆலத்துடையான்பட்டி. 150. கந்தசாமி, V., மாஸ்கேலியா. 151. கண்ணபிரான், G., சென்னை-1. 152. கண்ணபிரான் V. அறைகண்டநல்லூர்.

(L) 25. லோகநாதன், C., குடியாத்தம். 26. லக்ஷ்மிநாராயணன், K., முசிரி. 27. லக்ஷ்மண மூர்த்தி, S., கொழும்பு. 28. லக்ஷ்மணன், அண்ணாமலை, S., பம்பளபிட்டியா. 29. லக்ஷ்மி, M. S., மயிலாப்பூர். 30. லலிதா, G., சென்னை, 17. 31. லோகாம் பாள், S., கல்லிடைக்குறிச்சி. 32. லலிதா, V. N., சென்னை. 33. லக்ஷ்மி, V. S. N., அரக்கோணம். 34. லலிதா, பிரேமா, வசந்தா, லக்ஷ்மி, N., மதுரை. 35, லக்ஷ்மி விச்வநாதன், சேது லக்ஷ்மி, கல்கத்தா-26. 36. லலிதாம்பாள், R., கொல்லம். 37. லக்ஷ்மணன், K. S., பங்களூர். 38. லக்ஷ்மிநரசிம்மன், ராமமூர்த்தி, K., பழைய மாம்பலம். 39. லலிதா, விமலா, வத்சலா, M. K., மயிலாப்பூர். 40. லக்ஷ்மணன், S. P., பலவங்குடி. 41. லலிதா, S., ஆனந்தகடராஜன், செட்டிகாடு. 42. லலிதா, P. V., கணேசன், ராஜராஜேசுவரி, முசிரி. 43. லலிதா, வசந்தா, சீதா, கமலா, R., மதுரை. 44. லலிதா, M. R., மயிலாப்பூர். 45. லக்ஷ்மணன், S., ஆண்டிப்பட்டி. 46. லோகநாதன், C., வேப்பங்கனேரி. 47. லக்ஷ்மணன், C. B., மயிலாப்பூர். 48. லக்ஷ்மிநரசிம்மன், M. A., மதுராந்தகம். 49. லலிதா, K. S., ஜம்ஷெட்பூர்.

(M) 46. மைதிலி, S., கல்கத்தா-27. 47. மாதவன், R., மயிலாப்பூர். 48. முத்துகிருஷ்ணன், S., மேட்டூர் அணை. 49. முத்துராமன், S. P., பலவங்குடி. 50. மாயாவதி, விஜயலக்ஷ்மி, A. T., குடியாத்தம். 51. மீனாக்ஷிசுந்தரம், கல்லல். (விலாசம் எழுதவில்லை). 52. முத்துவெங்கட்ராமன், K. N., மதுராந்தகம். 53. மணி, A. S., கொல்லம். 54. முத்து, அண்ணாமலை, பழனியப்பன், R. M., கண்டனூர். 55. மகாலக்ஷ்மி, R., ஜீயபுரம். 56. மக்புல், M., பீமநகர், திருச்சி. 57. மாலதி, V., திருப்பத்தூர். 58. மாரிமுத்து, K. P., திருச்சி. 59. மனோரஞ்சிதம், T., குடியாத்தம். 60. மாதவன், சேது, கந்தசாமி, மருது, S., கொழும்பு. 61. மருதாசலம், K. K., சூலூர். 62. மங்களம், N., ஜானகி, சாந்தா, சந்திரா, திருவாரூர். 63. மாதவன், P. B., பம்பாய், 19. 64. முத்துக் குமாரசாமி, A., கொட்

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

அக்டோபர் '50 கூபன் கெ

டாஞ்சேனே. 65. மாதவி, ஜய லக்ஷ்மி, M. K., மதுரை. 66. மணி லிங்கம், K., புதுப்பாளையம். 67. மாரிமுத்து, N., தஞ்சாவூர். 68. மணி, S. V. S., ஆலப்புழை. 69. மோகனரங்கன், C.D., திருவேட்டீசுவரன்பேட்டை. 70. மஞ்சுளா, M., கடலூர், N. T. 71. மணியன், K. S., திருநெல்வேலி. 72. மோகன்பாபு, இளங்கோ, உமாராணி, K., கும்பகோணம் 73. மாதவன், கிருஷ்ணன், C. S., கும்பகோணம் 74. மாரியப்பன், S., கும்பகோணம். 75. மல்லிகார்ஜுனன், பத்மநாபன், V. N., எழும்பூர். 76. மாலினி, G., மயிலாப்பூர். 77. மாலதி பரமேசுவரன், P., மயிலாப்பூர். 78. மாலதி, N., சென்னை - 17. 79. மங்களம், ராஜகோபாலன், R., புதுடில்லி. 80 முத்துக்குமாரசாமி, N. திருவாரூர். 81. முத்துசாமி, P., திண்டுக்கல். 82. முத்துராமசாமி, M., காரைக்குடி. 83. மதுரைராஜன், P.S., மதுரை. 84. மாணிக்கம், A., ஹாட்டன்.

(N) 40. நித்தியகல்யாணி, சிற்சபேசன், S., வெள்ளவத்தை. 41. நடராஜன், K., சென்னை - 18. 42. நமசிவாயம், K., குடியாத்தம். 43. நடராஜன், M., கோயம்புத்தூர். 44. நாராயண ராவ், M., கோயம்புத்தூர். 45. நரசிம்மன், S., பம்பாய். 46. நம்பிராஜன், R., பாளையங்கோட்டை. 47. நாகராஜ், V., அநுராதபுரம். 48. நாகப்பன், A., சேலம். 49. நாராயணன், R., மயிலாப்பூர். 50. நீலாம்பாள், S., சோழவந்தான். 51. நாகரத்தினம், M., சிவகாசி. 52. நூர்மகமத், J., கோயம்புத்தூர். 53. நாராயணசாமி, S., வில்லிவாக்கம். 54. நாதன், A. R. R., சௌந்தரராஜன், சிதம்பரம். 55 நரேந்திரன், உஷாதேவி, V., வீரபோகம். 56. நாகராஜன், வேதகிரி, ராமன், N., உதகமண்டலம். 57. நாராயணன், R.V., திருவொற்றியூர். 58. நாராயணன், நரசிம்மன், R., மேட்டூர் அணை. 59. நடராஜன், ஜயலக்ஷ்மி, D. S., குடியாத்தம். 60. நாராயணசாமி, V., அருப்பன்குளம். 61. நடராஜன், S., போபால். 62. நாராயணன், K., மேட்டுப்பாளையம். 63. நாராயண ராவ், P. K., தர்மபுரி. 64. நாகராஜ், S., கல்யாண். 65. நாகராஜன், S., புனா. 66. நாகப்பன், I., டிக்கோயா. 67. நஞ்சப்பன், K., கோபிசெட்டிப்பாளையம். 68. நாகராஜன், G. B., குடியாத்தம். 69. நாச்சியப்பன், S., காரைக்குடி.

(மீதி அடுத்த இதழில்)

வரப்போகிறது!

கண்ணன்

தீபாவளி மலர்

விதம் விதமான வர்ணப் படங்கள், அழகழகான கதைகள், அற்புதமான வேடிக்கைகள் நிறைந்த அருமையான மலர்.

காலதேவன் சாபம்

நரசிம்மன்

சர்வேசுவரன் தலை நிமிர்ந்து எதிரே பணிவுடன் நிற்கும் கால தேவனைப் பார்த்தார்.

“ஏ காலா, பூமண்டலத்துக்குப் போய் அந்த மலையடிவாரத்தில் இருக்கும் பெண்மணியின் உயிரைக் கொண்டு வந்துவிடு, போ!” என்று கட்டளையிட்டார்.

காலதேவன் அந்தக் கட்டளையைக் கேட்டதும் பூமண்டலத்துக்கு விரைந்தான். நகரத்தின் எல்லையில் இருந்த மலையடிவாரத்தில் ஓர் எளிய குடிசையைக் கண்டான். உள்ளே முணுக் முணுக்கென்று ஒரு தீபம் எரிந்துகொண் டிருந்தது. சர்வேசுவரன் குறிப்பிட்ட பெண்மணி அந்தக் குடிசையில் ஒரு மூலையில் படுத்திருந்தாள். பக்கத்தில் ஒரு கைக் குழந்தை. சற்றுத் தூரத்தில் மற்றொரு குழந்தை பசியினால் கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தது. வறுமையின் சின்னமாக விளங்கியது அந்தக் குடிசை. தாயின் உடல் நெருப்பாகத் தகித்தது. நல்ல ஜுரம். குழந்தைகள் இரண்டும் பசியாலும் பட்டினியாலும் எலும்பும் தோலுமாய் இருந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட காலதேவனுக்கு மகா பரிதாபமாய் இருந்தது. ‘அட பாவமே! இவளுடைய உயிரைக் கொண்டு போய்விட்டால் இந்தக் குழந்தைகள் பட்டினியால் மரித்துப் போகுமே! இவர்களுக்கு வேறு கதிதான் ஏது?’ என்று நெஞ்சம் கலங்கியது.

சர்வேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றாமல் காலதேவன் வெறுங் கையுடன் திரும்பிச் சென்றான்.

சர்வேசுவரன் அவனைப் பார்த்ததும், “என்ன, அவள் உயிரைக் கொண்டு வந்தாயா?” என்று கேட்டார்.

காலதேவன் கையைப் பிசைந்துகொண்டு நின்றான்.

“சர்வேசா, என்ன பரிதாபம்! அந்தக் கண்ணராவியைக் கண் கொண்டு பார்க்கச் சகிக்கவில்லை. அவ்வளவு மோசமான நிலைமை! அவள் உயிரைக் கொண்டு வந்துவிட்டேனானால் நிச்சயம் அவளுடைய குழந்தைகள் உயிரும் போய்விடும். அதனால் வந்துவிட்டேன்” என்றான் காலதேவன்.

சர்வேசுவரன் முகத்தில் லேசாகப் புன்னகை ஒன்று அரும்பியது.

“அப்படியா சேதி! சரி; மகா சமுத்திரத்தில் குதித்து அதனடியில் இருக்கும் அந்தப் பாசி பிடித்த பாறாங்கல்லைக் கொண்டுவா, போ!” என்றார்.

மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றான் காலதேவன். சற்

றைக் கெல்லாம் அவர் சொன்ன கல்லுடன் திரும்பி வந்து சேர்ந்தான்.

“கொண்டு வந்தாயா?”

“இதோ இருக்கிறது, பிரபு!”

“எங்கே, அதை இரண்டாக உடை, பார்க்கலாம்!”

காலதேவன் அவர் ஆக்கினைப் படியே அந்தக் கல்லை இரண்டு துண்டுகளாக்கினான். ஆனால் என்ன விந்தை! அதற்குள்ளே இரண்டு புழுக்கள் நெளிந்தன.

“பார்த்தாயா காலா, இந்தப் புழுக்களை!”

“ஆம்; தெரிகிறது பிரபு.”

“யாரால் இவை போஷிக்கப் படுகின்றன தெரியுமா, உனக்கு?”

“தங்களுடைய தனிப் பெருங் கருணையினால்...” என்றான் காலதேவன்.

“கல்லினுள் புழுவுக்கும் கருப்பையினுள் இருக்கும் சிசுவுக்கும் என் கருணை இருக்கும் போது அந்தக் குழந்தைகளிடத்தில் மட்டும் இருக்காதா? நீயா என்மேல் சந்தேகப் படுவது?”

காலதேவனின் கை கால்கள் எல்லாம் சர்வேசுவரனுடைய பேச்சைக் கேட்டதும் வெடவெடவென்று நடுங்கின. அவன் வேர்த்து விறுவிறுத்துப் போனான்.

“தெரியாமல் செய்துவிட்ட பிழையை மன்னித்தருள வேண்டும்” என்று அவன் வாய் குழறியது.

சர்வேசுவரன் அவனை ஏறெடுத்துப் பார்த்தார். “போ! ரிஷிபுங்கவருடைய ஆசிரமத்தில் சில வருஷங்கள் போய் இருந்து தொண்டு செய். பிறகு இங்கே வரும்போது அவருடைய உயிரைக் கொண்டுவா” என்று சபித்துவிட்டார் அவர்.

காலதேவன் பிரம்மசாரியாக மாறினான். அவனை யாரென்று ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை. ரிஷிபுங்கவருக்கு அந்தப் பையனை ஆசிரமத்தில் சேர்த்துக்கொண்டதில் மிகுந்த சந்தோஷம். அடக்க ஒடுக்கமாய், ஊக்கத்துடன் அவன் செய்யும் பணிவிடைகளைக் கண்டு அவர் மனம் பூரித்தது. அவன் சிரிப்பதே இல்லை. புன்முறுவல்கூட அவன் முகத்தில் அரும்பியதை யாரும் கண்டதில்லை. அவன் உண்டு, அவன் வேலை உண்டு என்று தொண்டு செய்து வந்தான்.

அதிகாலையில் ஹோமத்துக்கு வேண்டிய சமித்துக்களைச் சேகரித்து வைப்பான். புனலிலிருந்து நீர் மொண்டு வருவான். பாத்திகளுக்குத் தண்

ணீர் ஊற்றுவான். மயில்கள் ஆடும்; குயில்கள் கூவும். சோலையிலுள்ள செடிகளில் பலவிதப் புஷ்பங்கள் எல்லாம் பூத்துக் குலுங்கும். அணிற்பிள்ளையும் செங்குரங்குக் குட்டியும் அவனோடு விளையாடும். ஆயினும் அவன் முகத்தில் சிரிப்பின் சின்னமே தோன்றுவதில்லை. இப்படிப் பல வருஷங்கள் ஓடிவிட்டன. ரிஷிபுங்கவருடைய அன்புக்கு அவன் பாத்திரமானான்.

ஒரு சமயம் அடுத்த தேசத்து அரசன் பெரிய யாகம் ஒன்று நடத்த விரும்பினான். ரிஷிபுங்கவரை அழைத்துச் செல்லப் பரிவாரங்களுடன் ஆசிரமத்துக்கு வந்தான். அரசனுடைய வேண்டுகோளை அவரால் தட்ட முடியவில்லை. யாகத்தை வந்து நடத்தித்தர அவர் ஒப்புக்கொண்டார்.

ரிஷிபுங்கவரும் அவருடைய பிரதான சிஷ்யர்களும் அந்த யாகத்துக்குக் கால்நடையாய்ப் புறப்பட்டார்கள். நகரத்தை நெருங்கும் போது அவர்கள் ஒவ்வொரு காட்சியாகப் பார்த்துக்கொண்டே போனார்கள்.

நகரத்தின் மாட மாளிகைகள் தூரத்திலேயே தெரிந்தன. சூரிய ஒளியில் அவை தகதகவென்று மின்னின. அந்த அற்புதங்களைப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. சாலையில் அவர்கள் நடந்து வரும்போது பக்கத்துப் புதரிலிருந்து ஒருவன் பானை ஒன்றைத் தோண்டி எடுத்துக்கொண்டிருந்தான். இதைக் கண்டதும் சிஷ்யர்களுடன் வந்துகொண்டிருந்த காலதேவன் முகத்தில் புன்னகை ஒன்று பூத்தது. மற்ற மாணாக்கருக்கெல்லாம் அந்த மனிதன் எடுத்த புதையலைக் காட்டிலும் காலதேவன் முதல் முதலாகப் புரிந்த புன்னகையே ஆச்சரியத்தை விளைவித்தது.

அஸ்தமன சமயமாகிவிட்டதால் அவர்கள் மேலும் நடந்து சென்று நகர எல்லையை அடைந்தார்கள். அங்கே ஒரு ஜோஸ்யன் மற்றவர்களுடைய அதிருஷ்டத்தைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தான்.

காலதேவன் முகத்தில் மறுபடியும் புன்னகை தோன்றிற்று. இப்பொழுதும் மற்றவர்கள் தங்களுடைய ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டார்கள்.

சாலை மரத்தடியில் ஒரு சக்கிலியன் செருப்புத் தைத்துக் கொண்டிருந்தான்.

ஒருவன், "இதோ பார், ஐந்து வருஷங்கள் உழைக்கும்படி தைத்துக் கொடுக்க வேண்டும்; முடியுமா?" என்று கேட்டான். இதைப் பார்த்த காலதேவனால் தன் சிரிப்பை அடக்க முடியவில்லை. வாயை விட்டுக் கலகல வென்று சிரித்தான். இவ்வளவு வருஷங்களில் அவன் சிரித்ததேயில்லை. ஆனால் இன்று அவன் புன்னகை புரிந்ததுடன் மட்டுமல்ல; வாயை விட்டுச் சிரித்திருக்கிறான். அவனோடு வந்தவர்களுக்கு எப்படி இருக்கும்! ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய் இருந்தது அவர்களுக்கு. அவனிடம் அவர்கள் இதுபற்றி ஒன்றும் கேட்கவில்லை. ரிஷி புங்கவர் முன்னதாக அரசனோடு போய்விட்டதால் அவர்கள் பேசாமல் இருந்தார்கள்.

நகரத்தின் கோட்டை வாசல் வந்தது. அப்பாடா! எவ்வளவு பெரிய கோட்டை! எவ்வளவு பெரிய வாசல்! காலதேவன் அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தபோது பின்னால் மேள வாத்தியத்துடன் ஓர் ஊர்வலம் வருவது தெரிந்தது. நடுவில் கல்யாணக் கோலத்தில் இருந்த பெண்ணையும்பிள்ளையையும் கண்ட காலதேவன் 'ஹோ' என்று விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டான். இந்தச் சமயம் குதிரை பூட்டிய ரதம் ஒன்று தடதட வென்று வந்தது. காலதேவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை.

"மந்திரியும் சேனாதிபதியும் வருகிறார்கள். வழி விடுங்கள்" என்று காவற்காரன் வழியை விலக்கினான்.

காலதேவன் விக்கிப் போய் நின்றான்.

மற்றச் சிஷ்யர்களுடைய ஆச்சரியம் எல்லை கடந்து போயிற்று. காலதேவன் ஒரே நாளில் சிரித்ததையும் அழுததையும் கண்ட அவர்கள் இதை ரிஷிபுங்கவரிடம் தெரிவிக்க எண்ணினார்கள்.

யாகமெல்லாம் முடிந்து எல்லாரும் ஆசிரமத்தை அடைந்தார்கள். நட்ட நடுநிசி. அவர்கள் ரிஷிபுங்கவரை நெருங்கி நடந்த விஷயங்களைத் தெரிவித்தார்கள். அவரும் இதைக்



கேட்டு உண்மையை அறிய ஆவல் கொண்டார்.

"அப்பா, குழந்தாய்! பல வருஷங்கள் நீ இந்த ஆசிரமத்தில் தொண்டு செய்திருக்கிறாய்! உன்னுடைய பணிவும் தொண்டும் என்னைப் பரவசப்படுத்தி விட்டன. ஆனால் நீ என்றுமே சிரித்ததோ அழுததோ கிடையாது. அப்படியிருக்க இவர்களெல்லாம் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. உனக்கு என்ன நேர்ந்தது?" என்று காலதேவனைக் கேட்டார்.

"ஸ்வாமி! நான் எல்லாவற்றையும் சொல்லும் காலம் வந்துவிட்டது. நான் இந்த ஆசிரமத்தை விட்டு நாளை நீங்க வேண்டும். ஆகையால் அந்தக் காரணத்தைச் சொல்கிறேன். என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்றான்.

எல்லாரும் அவன் சொல்லப் போவதைக் கேட்க ஆவலுடன் நின்றார்கள்.

"அவன் சுத்தக் கருமி. பாடுபட்டுத் தேடித் தானும் சாப்பிடாமல் பிறருக்கும் கொடுக்காமல் அவன் பொருள்களைப் பதுக்கி வைத்திருந்தான். ஆனால் அதைத் திருடர்கள் எடுத்துப் போய் வெறும் களிமண்ணை வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். அவன் பொருள்கள் அப்படியே இருக்கின்றன என்று நினைத்து அதைத் தோண்டியதைக் கண்டபோது எனக்கு வேடிக்கையாக இருந்தது. அதனால் புன்னகை செய்தேன்" என்றான்.

"சரி; அந்த ஜோஸ்யனைப்

பார்த்ததும் புன்னகை செய்தாயே, அது?''

''அதுவா? அவன் உட்கார்ந்திருந்த இடத்திலேயே புதையல் இருக்கிறது. அந்த ஜோஸ்யனே அதைத் தெரிந்து கொள்ளாமல் அவன் பிறருக்குக் கிடைக்கப் போகும் அதிருஷ்டத்தைப் பற்றிச் சொன்னான். இதைக் கண்டு புன்னகை செய்யாமல் எப்படி இருக்க முடியும்?''

''சக்கிலியனிடம் பேசிக்கொண் டிருந்தானே ஒருவன், அதைக் கேட்டு நீ ஏன் வாயை விட்டுச் சிரித்தாய்?'' என்றார் ரிஷிபுங்கவர்.

காலதேவன் பணிவுடன், ''ஸ்வாமி! அந்த மனிதன் ஐந்து வருஷங்கள் உழைக்கக் கூடிய செருப்புத் தைத்துக் கொடுக்கும்படி கேட்டான். அவன் மறுநாள் போக மறுநாள் இறந்து போகப் போகிறோம் என்பது தெரியாமல் அப்படிக் கேட்டதும் எனக்குச் சிரிப்பே வந்துவிட்டது'' என்றான்.

''குழந்தாய், எல்லாம் சரி! கடைசியாக நீ அழுத காரணத்தைச் சொல்லிவிடு! அத்துடன் உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது என்பதையும் எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

''மணக் கோலத்தில் அந்தப் பெண்ணும் பிள்ளையும் பார்ப்பதற்கு ரொம்ப மகிழ்ச்சியாய்த் தான் இருந்தார்கள். ஆனால் பெண்ணின் தலையில் இருந்த தாழம்பூவில் ஒரு நாகப்பாம்பு இருப்பது அவர்களுக்குத் தெரியாது. அது அவனைக் கடித்துவிடும்; இறந்துவிடப் போகிறான். யாராலும் அதைத் தடுக்கவும் முடியாது. அதனால் தான் அழுதேன்'' என்றான் காலதேவன்.

''எப்படி இவ்வளவையும் தெரிந்துகொண்டாய் என்பதைச் சொல்லவில்லையே நீ? மந்திரியையும் சேனபதியையும் கண்டு ஏன் திடுக்கிட்டாய் என்பதையும் சொல்லிவிடு'' என்றார் ரிஷிதேவர்.

காலதேவன் முதலில் சிறிது தயங்கினான். ஆனால் அவரிடம் தனித்துப் பேச விரும்பி, ''தங்களிடம் இதுபற்றித் தனியாகப் பேச வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். மற்றவர்கள் போனதும், ''ரிஷி தேவா! நாளையுடன் உங்கள் ஆயுளும் முடிந்துவிடுகிறது. நான்தான் காலதேவன். சர்வேசுவரனுடைய சாபத்தால் இங்கே வந்தேன். எந்தக் குழந்தைகளுக்காகப் பரிதாபப்பட்டு, சர்வேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றாமல் போனேனே அந்தக் குழந்தைகள்தான் அந்த மந்திரியும் சேனபதியும். அவர்களால் தான் எனக்கு இந்தச் சாபம் வந்தது. பொழுது விடிந்தால் என் சாபம் முடிவடைகிறது. அப்பொழுது தங்களை என்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும்'' என்றான்.

ரிஷிபுங்கவரின் கண்கள் பிரகாசமாய் விளங்கின.

பொழுது விடிந்தது. காலதேவன் சாபமும் நீங்கியது.

பவழவல்லி

கி. ரா.

ஆமைப்பெண் யார்?

ஆமை சொல்லியபடியே சுந்தரம் வடக்கு நோக்கி வெகு வேகமாகப் பறந்து போய்க்கொண் டிருந்தான். திடீரென்று ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான். விடிவெள்ளி உதயமாகிவிட்டது. பொழுது விடிவதற்குள்ளாகத் தாமரைக் குளத்தை அடைந்து விடவேண்டுமே என்று இன்



னும் வேகமாகப் பறக்கத் தொடங்கினன். கடைசியில் அங்கே கீழே தாமரைக்குளம் பசுமையாகத் தெரிந்தது.

கீழ்வானத்தில் ரோஜா வர்ணம் படர்வது தெரிந்தது. இன்னும் சற்று நேரத்தில் பொழுது விடிந்துவிடும். குளத்தின் படிக்கட்டில் போய் உட்கார்ந்ததும் சுந்தரத்துக்கு ஒரு பயம் தோன்றத் தொடங்கியது. அவன் குளத்துக்குள்

குதித்தால் வேறு புதிய ஆபத்து ஏதாவது ஏற்பட்டுவிட்டால் என்ன செய்கிறது? அவன் செத்துப்போனலும் போய்விடலாம். இருந்தாலும் வேறு வழியும் காணவில்லை.

இப்படியாக யோசித்த சுந்தரம் கடைசியில் பெரிய தெருப் பிள்ளையாரை மனத்தில் நினைத்துக்கொண்டு, "ஹரிஹி" என்று குளத்துக்குள் முழுகினன். அவ்வளவுதான்! அடுத்த நிமிஷத்தில் அவன் சுய உருவில் தண்ணீருக்குள்ளிருந்து எழுந்தான். அதிசயம் என்னவென்ருல் அவனுடைய ஆடைகள் ஒன்ருவது நனையவில்லை!

சுந்தரத்துக்கு உற்சாகம் தாங்கவில்லை. தங்க ஆமையை வாயார வாழ்த்தினன். கிழக்கு நோக்கி நடக்கலானன். அவனுடைய காரியம் கைகூடிவிட்டதாகவே நினைத்து மெய்ம்மறந்த ஆனந்தத்தில் ஹிந்திப் பாட்டுப் பாடிக்கொண்டே போனன்.

திடீரென்று, "யாரது? நில்!" என்ற ஒரு கீச்சுக்குரல் அதிகாரமாகக் கேட்டது. சுந்தரம் திடுக்கிட்டு நின்ருன். அவனுக்கு எதிரில் கருங்கல்லால் செதுக்கப்பட்ட ஒரு வாசற்படி இருந்தது. அதன் மூடிய கதவுக்கு முன்னல் ஆள் உயரத்துக்கு ஒரு பெண் சிலை நின்றுகொண்டிருந்தது. கோயில் வாசவில் இருப்பதைப்போல்தான் இருந்தது இந்தப் பொம்மையும். ஆனல் இந்தப் பொம்மைக்குக் கண்கள் உயிருடனிருப்பது போல் அசைந்துகொண்டிருந்தன.

சுந்தரம் ஆச்சரியத்துடன் இதைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இந்தச் சிலையின் உதடுகள் அசைந்தன.

"எங்கே வந்தாய்?" என்று கேட்டது இந்தச் சிலை.

"மந்திரத்தால் கட்டுண்ட நீர் யானையை விடுவிக்க வந்தேன்" என்ருன் சுந்தரம் பளிச்சென்று.

"ஓஹோ! நான் கேட்கும் கேள்விக்கு விடை அளிக்கிருயா?"

"அளிக்கிறேன்!"

"எங்கே, உலகத்தில் என்றும் அழியாத வஸ்து எது?"

சுந்தரம் விழித்தான். ஒரே கேள்விக்குச் சரியான விடை அளிக்கவேண்டும். இல்லையோ, இன்னும் என்ன என்ன ஆபத்துக்களில் மாட்டிக்கொள்ள வேண்டுமோ? அவன் மூளை வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. உலகத்தில் என்றும் அழியாத வஸ்து எது? 'சூரியன் - அல்ல, சந்திரன் - இல்லை, கடவுள் -'

ஆம். அவனுக்குத் தெரிந்துவிட்டது!

"உலகத்தில் என்றும் அழியாத வஸ்து, சத்தியம்!"

அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம்! படீரென்று ஒரு சத்தம் கேட்டது. பெரிய அதிர்ச்சியுடன் அந்தக் கற்கதவு திறந்துகொண்டது.

சுந்தரம் மடமடவென்று உள்ளே போனன். பெரிய கல் மண்டபம் தெரிந்தது. அதற்குள் போனன். அங்கே யாரையும் காணவில்லை. ஓர் ஈ, காக்கைகூட இல்லை. விசால

மான மண்டபமும், அதில் நின்ற பிரம்மாண்டமான தூண் களுந்தான் இருந்தன. அதைத் தாண்டி மற்ரெரு வாசற்படி வழியே உள்ளே நுழைந்தான். அங்கேயும் யாரும் இல்லை. நீர் யானை எங்கே?

இப்படியாகத் திறந்திருந்த வாசற்படிகள் வழியே மூன்று கட்டுகளையும் கடந்து போனுன். ஆனல் அவன் தேடிய யானை எங்கும் காணப்படவில்லை. இதென்ன அதிசயம்! இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் காரியம் நிறைவேறவில்லையே?

மனசில் வருத்தத்துடன் அவன் வந்த வழியே திரும்பி முதல் கட்டுக்கு வந்து சேர்ந் தான். கால் வலித்ததால் அப்படியே ஒரு கல்லின்மேல் உட்கார்ந்தான். அப்போது தான் கவனித்தான். அவன் உட்கார்ந்த இடத்துக்கு நேராகக் கீழே ஒரு படிக்கட்டு போயிற்று!

பத்துப் படிகள் இறங்கின துமே அவனுக்கு நம்பிக்கை வந்துவிட்டது. மாடு கட்டி யிருக்கும் கொட்டிலுக்குள் நுழைந்தால் ஒரு வித நாற்றம் அடிக்குமே, அதைப்போல் ஒரு நாற்றம் அவனுடைய மூக் கைத் துளைத்தது. அந்தத் தூணில் இரண்டு ஆணிகளி லிருந்து இரண்டு கொப்பிகள் தொங்கின. ஒன்று தங்கம்; மற்ரென்று வெள்ளி.

அவைகளைப் பார்த்ததும் சுந்தரம் ஒரு விநாடி யோசித் தான். அவைகளை எடுத்து யானைகளின் தந்தங்களில் மாட்டிவிடவேண்டியது! அவ் வளவுதான்! அவனுடைய கஷ்டங்கள் முடிந்துவிடும்! ஒரே தாவில் தாவிக்கைக்கு ஒரு கொப்பியாக எடுத்தான். எடுத்த வேகத்துடனேயே பாய்ந்து இரு கொப்பிகளையும் யானையின் தந்தங்களில் மாட்டி விட்டான்.

அவன் மாட்டியதுதான் தாமதம்! யானை "மா!" என்று அலறிற்று. சுந்தரம் தடால் என்று கீழே விழுந்தான். அவன் நிதானிப்பதற்குள் அவ னுடைய கால்களை இரு பிரம் மாண்டமான சங்கிலிகள் சேர்த்துப் பிணித்துவிட்டன!

சில நிமிஷங்கள் கழித்து அவன் எழுந்து உட்கார்ந்தான். என்ன நடந்தது என்று யோசித்துப் பார்த்தான். மறு படியும் அவன் தவறிவிட்டான். ஆமை சொன்னதை மறந்து தங்கக் கொப்பியை இடது பக்கமும் வெள்ளிக் கொப் பியை வலது பக்கமும் மாட்டி விட்டான்! வந்தது வினை!

தன்னைத் தானே நொந்து கொண்டான். தலையில் அடித் துக்கொண்டான். "என்னைப் போல் முட்டாள் இந்த உலகத் திலேயே கிடையாது!" என்று தானே உரக்கச் சொல்லிக் கொண்டான்.

அவன் தலையில் கையை வைத்துக்கொண்டு அப்படிச் சொல்லிக்கொண் டிருக்கும் போதே பொத்தென்று ஏதோ சத்தம் கேட்டது.

அவன் தலை நிமிர்ந்து பார்த்த போது அவன் எதிரில் தங்க ஆமை நின்றுகொண்டிருந்தது.

அதன் முகத்தில் கோபம் தாண்டவமாடிற்று. அவனைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டு அது சொல்லிற்று:

"நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லை. கடைசியில் தவறிவிட்டாய். இப்போது ஒரே வழிதான் இருக்கிறது. அதுதான் நான் முன்பே சொல்லியது: என்னைக் கொல்ல வேண்டும்; வேறு வழியில்லை. நம்முடைய எதிரிகளான மாயா ஜால மந்திரவாதியும், கருநாகனும் இன்னும் சற்றுநேரத்தில் இங்கே வந்துவிடுவார்கள். அவர்கள் வந்துவிட்டால் நீயும் பிழைக்க முடியாது, நானும் பிழைக்க முடியாது. அதற்குள்ளாக நீ என்னைக் கொன்று விட்டால் நீயும் பிழைக்கலாம், நானும் பிழைக்கலாம், பவழவல்லியும் பிழைத்துவிடுவாள். இல்லாவிட்டால் எல்லாரும் போகவேண்டியதுதான்!"

சுந்தரம் ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தான். அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

அப்போது ஆமை மேலும் சொல்லிற்று: "என்ன விழிக்கிறாய்? உன் காலடியில் கிடக்கும் கருங்கல்லைத் தூக்கி என் தலையில் போடு; யோசிக்காதே! வா!"

இப்படிச் சொல்லிக் கொண்டே ஆமை அவனிடம் நெருங்கி வந்து தன் கழுத்தை வெளியில் நீட்டிக்கொண்டு நின்றது.

அப்போது சுந்தரம் ஒன்றும் புரியாமல் கல்லைத் தூக்கிப் பொத்தென்று ஆமையின் தலையில் போட்டுவிட்டுக் கண்ணை இறுக மூடிக்கொண்டான்.

கலகலவென்று ஒரு பெண் சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு, சுந்தரம் கண்ணைத் திறந்தான். என்ன அதிசயம்! அவன் முன் ஆமையைக் காணவில்லை. அதற்குப் பதில் ஓர் அழகிய பெண் நின்றுகொண்டிருந்தாள். அவனைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு நின்றாள்.

தன் கண்களையே நம்பாமல் சுந்தரம் அவளை நோக்கி, "நீ யார்?" என்றான்.

அவள், "நான்தான் அன்னக்கிளி!" என்றாள். அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவள் மிகவும் குள்ளமாக இருந்தாள். இடைக்குக் கீழே ஓர் ஆமையைப் போல் இருந்தாள் அவள். பச்சைப் பட்டால் ஆடை உடுத்தியிருந்தாள். கழுத்தில் அலங்காரமான புஷ்ப மாலைகள் போட்டிருந்தாள்.

"பிறகு அழகு பார்க்கலாம். நமக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே அவனுடைய உடலைப் பிணித்திருந்த சங்கிலிகளைத் தொட்டாள். சங்கிலிகள் இரண்டாய் முறிந்தன.

சுந்தரம் பிரமித்துப் போனான்.

... குழந்தைக் காப்பக ...

(தொடரும்)

பொழுது புலர்ந்தது

"கீரன்"

அஸ்தமன நேரம். சுவாமிக்கு எதிரில் தீபத்தை ஏற்றி வைத்து, கை விளக்கை எடுத்துக்கொண்டு சாவித்திரியம்மாள் வாசலுக்கு வந்தாள். திண்ணையோரமாக யாரோ விசித்து விசித்து அழுகிற சப்தம் கேட்டது. எட்டிப் பார்த்தாள். ராஜம் அங்கே நின்று அழுதுகொண் டிருந்தாள். "ராஜம்! எதுக்கம்மா அழறே?" என்று அன்புடன் கேட்டுக்கொண்டே அருகில் சென்றாள் சாவித்திரியம்மாள். ராஜம் கண்ணைக் கசக்கிக் கொண்டே தெருப்பக்கம் கையை நீட்டினாள். சாவித்திரி அவள் கையைக் காட்டின திசையில் பார்த்தாள்.

ஏழெட்டுச் சிறுமிகள் கும்பலாகப் போய்க்கொண் டிருந்தார்கள். எல்லோரும் பட்டுப் பாவாடை, பட்டுச் சட்டை அணிந்து தலைவாரி அழகாகப் பின்னிப் பூ வைத்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு குங்குமச்சிமிழ் இருந்தது. அவர்கள் கொலுவுக்கு அழைக்கப்போகிறார்கள் என்பது தெரிந்தது.

"ஏன், ராஜம், நீயும் அவர்களோடு போக வேண்டும் என்று அழுகிறாயா?" என்று கேட்டாள் சாவித்திரி.

"இல்லே. நானும் அவர்களோடு சேர்ந்து போனேன். வரக்கூடாது என்கிறார்கள்" என்று சொல்லி மறுபடியும் அழுதாள் ராஜம்.

"ஏன் வரக்கூடாதாம்? யார் சொன்னது? லக்ஷ்மியா?" என்று கேட்டாள் சாவித்திரி. ராஜம் பதிலொன்றும் சொல்லாமல் மேலும் அழுதாள்.

"அவள்தான் சொல்லியிருப்பாள். அவள் பணக்காரப் பெண்......" என்று சாவித்திரி சொல்லிக்கொண்டே வருகையில் ராஜம் இடைமறித்துப் பேசினாள்.

"அவள் ஒன்றும் சொல்லவில்லையம்மா. கோடி வீட்டுக் குந்தளம் இல்லே; அவள்தான், 'தூ! உன் அழுக்குப் பாவாடையும் சட்டையும் பார்க்கச் சகிக்கவில்லே; எங்களோடு வரப்படாது' என்று பிடித்துத் தள்ளிவிட்டாள்" என்று சொல்லிவிட்டுக் கேவினாள் ராஜம்.

"போனால் போகிறது போ. நீ உள்ளே வா."

"நம்ம வீட்டிலேயும் கொலு வையேன் அம்மா!" என்று பரிதாபமாகக் கெஞ்சினாள் ராஜம். சாவித்திரி சிரித்தாள்.

"எல்லார் வீட்டையும்போல நம் வீட்டிலேயும் கொலு வைத்தால் நானும் எல்லாரையும் போல் வீடு வீடாய்ப் போய், கொலுவுக்கு அழைப்பேனே இல்லையோ? நீ என் கொலு

வைக்கமாட்டேன் என்கிருய்?''

"பொம்மைகள் இல்லையே, அம்மா'' என்று அங்கலாய்ப்புடன் சொன்ஞள் சாவித்திரி.

"வாங்கி வையேன்.''

"வாங்குவதற்குப் பணம் வேண்டாமா?''

ராஜத்தின் மனம் சமாதானமடையவில்லை. அழுதாள். அதைக் கண்டு தாயின் மனம் வருத்தமடைந்தது. கண்களில் நீர் துளும்பியது. சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. கூடத்திலே சில பலகைகளை அடுக்கி எங்கோ, பரண்மீது கிடந்த மரப்பாச்சி செப்பு முதலியவைகளை எடுத்துத் தூசி தட்டிப் பரத்தி வைத்தாள். அதைக் கண்டதும் ராஜத்தின் மனம் சந்தோஷமடைந்தது. உடனே, "என் தலையை வாரிப் பின்னிவிடு, அம்மா'' என்ருள். சாவித்திரி பின்னிவிட்டாள். புதுப் பாவாடையும் சட்டையும் வேண்டும் என்று மறுபடியும் அழ ஆரம்பித்தாள் ராஜம். பாவம், சாவித்திரி எங்கே போவாள் புதுப் பாவாடைக்கும் சட்டைக்கும்? இருப்பதற்குள் நல்லதாக எடுத்து உடுத்திவிட்டாள். மரக் குங்குமச் சிமிழ் ஒன்று இருந்தது. அதை எடுத்துக் கொண்டு குதூகலத்துடன் தெருவில் ஓடினள் ராஜம். சாவித்திரியின் மனத்தில் ஒரு சந்தோஷமும் ஒரு வேதனையும் உண்டாயிற்று.

ராஜம் ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோதே அவள் தந்தை காலமாகிவிட்டார். அப்பொழுது அவள் அண்ணன் வரதனுக்குப் பன்னிரண்டு வயது. இரண்டு குழந்தைகளுடன் மிகவும் கஷ்டஜீவனம் நடத்திவந்தாள்.

வரதன் துஷ்டஞக இருந்தான். சரிவரப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படிக்காமல் ஊர் சுற்றிக்கொண்டிருந்தான், நல்ல வார்த்தை சொல்லித்

திருத்த முயன்றாள் சாவித்திரி. அவனே திருந்தவேயில்லை. ஒரு நாள் ராஜத்தைப் போட்டு அடி அடியென்று அடித்துவிட்டான். சாவித்திரிக்குப் பொறுக்கவில்லை. வரதனை நையப் புடைத்தாள். "சம்பாதித்துக் குடித்தனம் செய்கிற வயதாயிற்று. துளிக்கூட உடம்பிலே சுரணையில்லாமல் தீவட்டி மாதிரி அலைகிறாயே!" என்றாள். வரதனுக்குக் கோபமும் ரோசமும் தாளவில்லை. சொல்லிக் கொள்ளாமல் எங்கோ ஓடிப் போய்விட்டான். வருஷம் ஐந்துக்கு மேலாகியும் அவனைப் பற்றி ஒரு தகவலுமில்லை. அந்த வருத்தத்தினால் சாவித்திரி எந்த நாள் கிழமைகளையும் கொண்டாடுவதில்லை. ராஜம் சிறுமிதானே? அவளுக்கு அதெல்லாம் தெரியுமா? ஊரிலுள்ள தன்னையொத்த பெண்களின் ஆடையாபரணங்களைக் கண்டு தனக்கும் அதெல்லாம் இல்லையே என்று அடிக்கடி வருந்துவாள், அழுவாள். இப்போதும் அதேமாதிரி நவராத்திரிக் கொலுவைக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். கொலு என்று சில மரப்பாச்சிகளை வைத்ததும் அவள் உள்ளம் திருப்தி அடைந்துவிட்டது.

ஆனால் அவள் போய் எல்லோர் வீட்டிலும் கொலுவுக்கு அழைத்தும் யாருமே வரவில்லை. அன்றிரவு கோயிலுக்குப் போனபோது அவளைப் பரிகாசந்தான் செய்தார்கள்.

"ஏன் ராஜம்? நாங்களெல்லாம் கொலுவுக்கு அழைக்கிறோமே என்று நீயும் போய் வீடு வீடாகக் கூப்பிட்டாயே, யாராவது வந்தார்களோ?" என்று கபடமாகச் சிரித்துக் கொண்டே கேட்டாள் ஒரு பெண்.

"நான் போய்ப் பார்த்தேனே, ராஜத்தின் வீட்டுக் கொலுவை. குப்பைமேட்டிலே போட வேண்டிய மரப்பாச்சி, சோழிகளைப் பரப்பி வைத்திருக்கிறாள்" என்றாள் இன்னொரு பெண் சிரித்துக்கொண்டே.

"நல்ல நல்ல பொம்மைகளை வாங்கி வைத்திருந்தாலுங் கூடத்தானாகட்டும், இவள் இந்தப் பீத்தலும் அழுக்குமான பாவாடை சட்டைகளோடு போய் மஞ்சள் குங்குமத்துக்குக் கூப்பிட்டால் யார்தான் போவார்கள்?" என்றாள் குந்தளம்.

"அது போகட்டும்; என்ன சுண்டல்?" என்று கிண்டலாகக் கேட்டாள் வேறொருத்தி.

"சுண்டலா? அதெல்லாம் ஒன்றுமில்லை. துளி பூண்டு பொட்டுக்கடலையும், வெல்லக் கட்டியுந்தான். அவைகளை எதிரே வைத்து, 'நீயே அருள் செய்வாய், தாயே!' என்று ஏதோ பாட்டை முணுமுணுத்துக்கொண்டிருந்தாள் என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தாள், முதல் பெண். எல்லோரும் கூடச் சேர்ந்து சிரித்தார்கள். பிறகு, "எங்கள் வீட்டிலே ஒன்பது படிக் கொலு வைத்திருக்கிறது", "எங்கள் வீட்டிலே பெரிய பெரிய பொம்மைகளெல்லாம் வாங்கியிருக்கிறது", "எங்கள் வீட்டிலே நேற்றுச் சோமாசி, இன்று

குஞ்சாலாடு" என்று அவரவர்கள் தத்தம் வீட்டுப் பிரதாபங்களை அளந்தார்கள். ராஜத்துக்கு அழுகையாய் வந்தது. நீர் நிறைந்த கண்களுடன் அம்பாளைப் பார்த்தாள்.

"ராஜம்!....." என்று யாரோ கூப்பிடுவதுபோல இருந்தது. கண்ணைப் பறிக்கும்படியான ஜோதியுடன் தேவி எதிரே நின்று அவளைப் பார்த்து, "குழந்தாய்! வருத்தப் படாதே! பணத்தைச் செலவழித்துக் கொலு வைத்தாலும், சாதாரண மரப்பாச்சிகளை வைத்தாலும் எனக்கு எல்லாம் ஒன்றுதான். நாள் ஒன்றுக்கு நாலுவித பட்சணம் செய்தாலும் தினந்தோறும் பொட்டுக் கடலை, வெல்லம் படைத்தாலும் எனக்கு ஒன்றுதான். உண்மைப் பக்தி ஒன்றுதான் எனக்குப் பிடித்தமானது. நீ உள்ளமுருகப் பாடுவதே போதும். உனக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று தேவி சொன்னது போலிருந்தது.

ராஜம் குதித்துக்கொண்டே வீட்டுக்கு ஓடினாள். எதிரே தாயார் நின்றுகொண் டிருந்தாள். சிரித்துக்கொண்டே, "ராஜம்! இதோ பார்! யார் தெரிகிறதா? உன் அண்ணா வரதன்! இப்போதுதான் ஊரிலிருந்து வந்தான். உனக்கு நிறையப் பட்டுப்பாவாடை, சட்டை எல்லாம் வாங்கி வந்திருக்கிறான்" என்றாள். ஆச்சரியத்துடன் துள்ளி யெழுந்த ராஜம் பிரமித்துப் போனாள்.

தாயும் மகனும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவன்தான் எங்கெங்கோ சுற்றியலைந்ததையும் கடைசியில் ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்து நல்ல பெயரும் பணமும் சம்பாதித்ததையும் விவரமாகச் சொன்னான். ராஜம் பொழுது எப்பொழுது விடியும், மற்றப் பெண்களுக்கு எப்பொழுது இந்தச் சந்தோஷச் செய்தியைச் சொல்லலாம் என்று யோசித்துக்கொண் டிருந்தாள். பொழுது புலர்ந்தது. ராஜத்தின் முகமும் மலர்ந்தது.

கீரிக் குட்டி வில்லு

தி. ஜ. ர.

"எல்லாப் பிள்ளைகளும் வந்து விட்டார்களா?'' என்று கீரிப்பிள்ளை வாத்தியார் கேட்டார்.

"கிக்குர்! கிக்குர்!'' என்று ஆஜர் கொடுத்தன கீரிக்குட்டிகள்.

தோட்டத்திலே நடந்தது இந்தப் பள்ளிக்கூடம். ஒரு புதரில் உட்கார்ந்திருந்தார் வாத்தியார். புதரைச் சுற்றி உட்கார்ந்திருந்தன கீரிக்குட்டிகள்.

"இப்போது ஒரு கணக்குப் போடப் போகிறேன்'' என்று ஆரம்பித்தார் வாத்தியார்.

வில்லு என்ற குறும்புக்காரக் குட்டிக்குக் கணக்கு என்றாலே பிடிக்காது.

"ஸார், இதோ தேள், ஸார்; தேள்'' என்றது வில்லு.

வாத்தியாருக்குத் தேளில் வெகு பிரியம். உடனே தாவி எழுந்தார். "க்ருகுர்! க்ருகுர்! எங்கே? எங்கே?'' என்று கேட்டுக்கொண்டே பாய்ந்தார். உண்மையிலேயே அங்கே ஒரு தேள் இருந்தது. அதைக் கொன்று தின்றார். அந்தச் சந்தோஷத்தில் வாத்தியாருக்குக் கணக்கு மறந்துவிட்டது.

"நீ பலே கெட்டிக்காரன்! பலே கெட்டிக்காரன்!'' என்று வில்லுவைத் தட்டிக் கொடுத்தார். பிறகு, "நேற்று என்ன பாடம் நடத்தினோம்?'' என்று மாணவர்களைக் கேட்டார்.

"சமூக அறிவுப் பாடம், ஸார்'' என்று ஒரு குட்டி சொல்லிற்று.

"ஆம், சரி. இன்று உலகெங்கும் மனிதர்கள் வீடு கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்களே. இதன் காரணம் என்ன?'' என்று வாத்தியார் கேட்டார்.

"முட்டாள்தனம், ஸார்'' என்று சட்டென்று சொல்லியது வில்லுக்குட்டி.

"எங்கே, இதற்கு விளக்கங் கூறு'' என்றார் வாத்தியார்.

"வசிப்பதற்கு இயற்கையில் எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. பாறை, புதர், கறையான் புற்று, அடிமரப் பொந்து இவைகளிலெல்லாம் வசிக்கலாம். இது மனிதர்களுக்குத் தெரியவில்லை; நமக்குத் தெரிகிறது. இந்த ஒன்றும் அகப்படாவிட்டாலும் நாம் சமாளித்துக்கொள்வோம். மனிதர் கட்டிய வீட்டின் ஒரு விட்டம் நமக்குப் போதும். அதுவும் இல்லாவிட்டால், தரையில் நாமே குழிபறித்து அதில் வசிப்போம்'' என்றது வில்லு.

"அடுத்த பையனுக்கு இந்தக் கேள்வி: நமக்கு உணவுக் கஷ்டம் இல்லாமல் எப்படிச் சமாளிக்கிறோம்?''

"எலி, தவளை, பாம்பு, சிலந்தி, கோழி எந்த ஜந்துவாயிருந்தாலும் சரிதான்; நம்மால் அடித்துக் கொல்ல முடிந்ததையெல்லாம் தின்றுவிடுகிறோம்'' என்றது அடுத்த குட்டி.

"பறவை முட்டையும் கொஞ்சம் கொஞ்சம் காய்கறியுங்கூட நாம் தின்பதுண்டு, ஸார்'' என்றது இன்னொரு குட்டி.

இடையிலே ஒரு குட்டி ஒரு குறுக்குக் கேள்வி கேட்டது. "ஒரு ரகசியமான பச்சிலை இருக்கிறதாமே, ஸார். அதில் நாம் போய்ப் புரண்டுவிட்டு வந்தால், பாம்பு விஷம் நம்மை ஒன்றும் செய்யாதாமே. இது உண்மையா?'' என்றது.

"முழுப் பொய். இதை நம்பாதே. நம் சாமர்த்தியத்தால் தான் பாம்பை வெல்லவேண்டும்'' என்றார் வாத்தியார்.

இந்தக் கேள்வி - பதிலெல்லாம் வில்லுக்குட்டிக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. யாருக்கும் தெரியாமல் அது மெல்ல நழுவி விட்டது.

கிக்ரகுர்! கிக்ரகுர்!—வில்லுக் குட்டி களிப்போடு கத்திக் கொண்டு ஓடியது.

வில்லுக்குட்டி பிறந்தபோது அதன் உடம்பில் ரோமமே இல்லை. மிகவும் விகாரமா யிருந்தது. எலிக்குஞ்சு மாதிரி கறுப்பாயிருந்தது. அதோடு கூடவே இன்னொரு தங்கையும் பிறந்தது. அதுவும் இப்படித்தான். என்றாலும், இரண்டுக்கும் அம்மா பால் கொடுத்து, மிகவும் அன்போடு வளர்த்தது. அம்மா இரைதேட எங்கே போனாலும் சரிதான்; இந்தக் குட்டிகளை வாயில் கௌவித் தூக்கிக்கொண்டே செல்லும். அவ்வளவு பத்திரமாய் அவைகளைப் பாதுகாத்தது. அந்தக் காலத்தில் பார்க்க வேண்டுமே; குட்டிகளை எந்தப் பிராணியாவது சீண்டினால். அம்மா மகாமூர்க்கமாய் எதிர்க்கும்; சண்டையிடும்; குட்டிகளைக்காப்பாற்றும். ஆனால், பழகிய மனிதர்களைக் கண்டால், அதற்குப் பயமே கிடையாது. சாதுவாய் அவர்களிடம் நடந்து கொள்ளும். வில்லுக் குட்டிக்கும் அதன் தங்கைக்கும் பதினைந்து பதினாறுநாள்வரைக்கும் கண்ணே தெரியவில்லை; அப்புறந்தான் கண் திறந்தது. உடம்பிலே ரோமம் முளைத்தது. பிறகு அவைகளை அம்மா சுமப்பதில்லை. ஆனால் அம்மா போகும் இடமெல்லாம் அவை போகும்; அம்மா செய்வதையெல்லாம் பார்த்துப் பார்த்து அவை செய்யும்.

வில்லுக்குட்டி பிறந்து ஒன்றரை மாசம் ஆகிறது. இப்போது தான் தனியாக அங்கும் அங்கும் போகத் துவக்கியது.

பள்ளிக்கூடத்தை விட்டுப் புறப்பட்ட வில்லுக்குட்டி, ஓட்டமாய் ஓடிவந்தது. அதற்கு அந்தத் தோட்டத்திலே நன்றாய் வழி

தெரியும். கண்ணைக் கட்டி விட்டால்கூட வழி பிசகாமல் போகும். இந்தச் சக்தி எந்தக் கீரிக்குட்டிக்குமே இருக்கிறது. கீரிக்கு அதன் வாலுக்கு அருகே ஒரு பை இருக்கிறது. அதில் ஒருவித நீர் சுரக்கிறது. அதை வழியிலே கீரி பீச்சிக்கொண்டே போகும். அந்த நீரின் நாற்றத்தை மோப்பம் பிடித்தால், போன வழியெல்லாம் கீரிக்குத் தெரியும். இதனால்தான் கீரிக்கு வழி பிசகுவதில்லை.

ஒரு பெரிய அடிமரத்தின் பொந்துதான் வில்லுவின் அம்மா வசிக்கும் இடம். வில்லுக்குட்டி அம்மாவைப் பார்க்க ஓடிற்று. வழியிலே ஒரு நாகப்பாம்பு சரசர என்று ஊர்ந்தது. 'இதை ஏன் நாம் அடிக்கக் கூடாது?' என்று வில்லுக்குட்டி எண்ணியது. நாகத்திடம் போய் அதை உறுத்துப் பார்த்தது. வில்லுவைக் கண்டதுமே நாகம் ஆத்திரம் கொண்டது. பெரிசாய்ப் படம் எடுத்தது. 'உஸ்ஸ்ஸ்' என்று சீறியது.

வில்லுக்குட்டி, 'ஏ அப்பாடா! பெரிய பாம்பு! இதை நாம் கொல்ல முடியாது' என்று எண்ணியது.

'கிக்கிர பிக்ர கிர்!' என்று உளறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது. இரைக்க இரைக்க அம்மாவிடம் போய் இதைச் சொல்லியது.

''நாகப்பாம்பா! நமக்கு நல்ல வேட்டைதான். இதோ போய் அதை நான் ஹதம் செய்கிறேன், பார். கிக்ரு; கிக்ரு; கிக்ரபுர்!'' என்று உறுமிக்கொண்டே கிளம்பியது அம்மா.

நாகம் இருக்கும் இடத்தை அடைந்தது. நாகத்துக்கும் கீரிக்கும் பெரிய சண்டை ஆரம்பித்து விட்டது. கொரியாச் சண்டையை விடப் பெரிய சண்டை. மனிதனுக்குத்தான் சண்டை போடத் தெரியும் என்று நினைக்காதே, தம்பி. மிருகங்களுக் கெல்லாங் கூடத் தெரியும். சொல்லப் போனால் சண்டை போடுவதே மிருக குணந்தான். மனிதனை விட்டு இன்னும் அந்தக் குணம் போகவில்லை. இது போகட்டும்; கீரி - பாம்புச் சண்டையைப் பார்ப்போம்.

கீரி வாலை விறைத்து நீட்டிக் கொண்டு நின்றது. அப்போது அது மூன்றடி நீளம் இருந்தது. உடம்பு ஒன்றரை அடி நீளம்; வால் மட்டும் ஒன்றரை அடி நீளம். சாம்பல் நிறம். இடை இடையே பழுப்புப் புள்ளிகள் தோன்றின. இதைப் பார்த்ததுமே பாம்பு மருண்டுவிட்டது. இருந்தாலும் ஜம்பத்தை விடாமல் தன் ஆறடி நீளமுள்ள உடம்பைப் புஸ் என்று உப்பியது.

''கிக்ர குர்ர்ர்! வா, சண்டைக்கு'' என்று கத்தியது கீரி.

''உஸ்ஸ்ஸ்-உஸ்ஸ்ஸ்! இதோ உன்னைத் தொலைக்கிறேன், பார்'' என்று சீறியது நாகம்.

கீரியின் முகம் பேய்மாதிரி பயங்கரமாயிருந்தது.

பாம்பின் கண் தீச்சுடர்போல் ஜொலித்தது. அது நாக்கை நாக்கை நீட்டியது.

கீரி சுற்றிச் சுற்றி வந்து பாம்பின் தலையைப் பிடிக்கக் குறி பார்த்தது.

பாம்பு நாலடி உயரம் எழும்பிப் படமெடுத்து, அப்படியும் இப்படியும் திரும்பி, கீரியைக் கொத்தப் பார்த்தது. அதன் வால்புறம் இரண்டடி நீளந்தான் பூமியிலே கிடந்தது.

கீரி தன் உடம்பு மயிரைச் சிலிர்த்து, இரண்டு மடங்காய் உப்பியதுபோல் தோற்றியது.

'உஸ்ஸ்ஸ் - சொடேர்!' —கீரியைப் பாம்பு கொத்தியது. கீரி

சட்டென்று துள்ளி ஒதுங்கிவிட்டது. பாம்பின் பல் கீரியின்மேல் படவில்லை.

மறுபடியும் கொத்த வந்தது பாம்பு. இந்தத் தடவை அதன் குறி பிசகவில்லை. ஆனலும், அது ஏமாந்துவிட்டது. கீரியின் மேலே சிலிர்த்து, விறைத்து நின்ற ரோமத்தையே கீரியின் உடம்பென்று பாம்பு நினைத்துக் கொண்டது. அதனல் போதிய ஆழத்தில் அது கொத்தவில்லை.

மூன்ருவது முறையும் கொத்தியது பாம்பு. இந்தத் தடவை நேராகக் கொத்தாமல் கொஞ்சம் சாய்வாகக் கொத்தியது. கீரியின் தோல் பன்றித் தோல்மாதிரி தடிப்பானது. சாய்ந்து கொத்தியதால் பாம்பின் பல், கீரியின் தோலில் ஆழமாய்ப் படவில்லை; சிறிதே பட்டது. கொஞ்சம் விஷமும் கீரியின் உடம்பில் ஏறிவிட்டது. நிறைய விஷம் ஏறிஞல், மற்றவர்களைப் போலவே கீரியும் செத்துவிடும். நாமாக இருந்தால், சொற்ப விஷங்கூடத் தாங்கமாட்டோம். கீரியைச் சொற்ப விஷம் ஒன்றும் செய்யாது. கீரி இந்தத் தடவையும் தப்பித்துக்கொண்டது.

பாம்புக்கு ஒரே களைப்பாய்ப் போய்விட்டது. சோர்வடைந்தது. களைப்பு நீங்கி அது மறுபடியும் கொத்த வருவதற்குள், கீரி தாவிப் பாய்ந்தது. பாம்பின் தலையைக் கெட்டியாய்ப் பிடித்தது; நசுக்கியது; துவைத்தது. அது ஒரேயடியாய் நசுங்கி உருவற்றுப் போயிற்று. பாம்பின் உடம்பும் வாலும் மாத்திரம் கொஞ்சநேரம் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தன.

வில்லுக்குட்டிக்கு வெகு உற்சாகம். தானும் பெரிய வீரன் மாதிரி, இந்தச் சமயம் பார்த்துத் துள்ளியது. தலைபோன முண்டமான பாம்பின் வாலைக் கௌவிக் குதறியது.

வில்லுவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தன்னை மிரட்டிய பாம்பை அம்மா அடித்துக் கொன்று போட்டதில், அது பூரிப்படைந்தது.

கடைசியில் வில்லு அந்தச் செத்த பாம்பை இழுத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குத் திரும்பியது. மற்றப் பையன்களிடம், ''இதோ பார்த்ீர்களா! இதை நான் கொன்றேன்; நான் கொன்றேன். இனிமேல் உங்களில் யாராவது என்னிடம் சண்டைக்கு வந்தீர்களோ, தொலைத்து விடுவேன். ஜாக்கிரதை!'' என்று ஜம்பம் அடித்துக்கொண்டது. மற்றக் குட்டிகளும் அதை நிஜம் என்றே நம்பிவிட்டன. வில்லுக் குட்டியிடம் வெகு மரியாதையாய் நடந்துகொண்டன.

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். நீங்கள் அனுப்பிய பதக்கம் வந்து சேர்ந்தது. ரொம்ப ரொம்ப ஜோராக இருந்தது பதக்கம். டில்லியில் எப்பொழுது கூட்டம் கூடுவீர்கள்? நீங்கள் டில்லிக்கு வருவீர்களா, மாட்டீர்களா?

இப்படிக்கு உங்கள் மாணவி,
பத்மா, (P. 48) புது டில்லி.

[புது டில்லியில் நீங்கள் எவ்வளவு தமிழ்க் குழந்தைகள் இருக்கிறீர்கள்? அவ்வளவு பேரும் கண்ணன் கழக அங்கத்தினர்கள் ஆவீர்களா, மாட்டீர்களா? - ஆ-ர்.]

* * *

குழந்தைப் புத்தகக் காட்சி

வருகிற அக்டோபர் மாதம் 19, 20 ஆகிய இரு தேதிகளிலும் சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் குழந்தைப் புத்தகக் காட்சி நடைபெறும். குழந்தைகளுக்காக இது வரை வெளிவந்துள்ள புத்தகங்கள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் மாணவர்களும், மற்றவர்களும் கண்டு களிக்கவேண்டும் என்பதே இக்காட்சி நடத்துவதன் முக்கிய நோக்கம்.

குழந்தைகளுக்காகப் புத்தகங்கள் வெளியிட்டிருப்பவர்கள், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிரதியை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள், தங்கள் கையெழுத்துப் புத்தகங்கள், பத்திரிகைகளையும் அனுப்பிவைக்கலாம். அவைகளும் இக்காட்சியில் இடம் பெறும்.

புத்தகங்கள், பத்திரிகைகளை 10 - 10 - '50க்குள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைப்பின் நலம்.

காரியதரிசி, குழந்தை எழுத்தாளர் சங்கம்,
4, ரட்லண்ட் கேட், காலனி, சென்னை. 6.

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். நீங்கள் அனுப்பிய காமிரா உடையாமல் வந்து சேர்ந்தது. காமிரா ரொம்ப நன்றாய் இருக்கிறது. நீங்கள் கேட்டிருந்தபடி என்னுடைய போட்டோவை அனுப்பியிருக்கிறேன். என் நன்றியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஜி. எஸ். விசாலம், (V. 46) திருநெல்வேலி.

காமிராப் பரிசுப் போட்டியில் பரிசைத் தட்டிக்கொண்டு போன சௌ. விசாலம்.

*   *   *   *

செவிட்டுக் குடும்பம்

ஒருநாள் ஆறுமுகம் திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது இரண்டு பேர் அவரிடம் வந்து, "இந்த ஊரில் சத்திரம் எங்கே ஐயா, இருக்கிறது?" என்றார்கள். ஆறுமுகம் உடனே எழுந்து உள்ளே போய், தம் மனைவியைப் பார்த்து, "இந்தா சம்பகம்! நம்ம வீட்டு எருமை மாட்டை யாரோ இரண்டு பேர் வந்து விலைக்குக் கேட்கிறார்கள். என்ன?" என்றார்.

"இதென்ன அக்கிரமம்! நான் எச்சில் இலையை வாசல்லே போடவேயில்லையே! வேணும்னா குழந்தை கோமளத்தைக் கேட்டுப் பாருங்க" என்று சொல்லிவிட்டுக் காபி போட்டுக்கொண்

டிருந்த கோமளத்திடம் போனுள். "என்ன கோமளம்! எச்சில் இலையை நான் எங்கேடி போட்டேன்?'' என்று கேட்டாள்.

"நல்ல கதை நீ சொல்றது! நானு குடிச்சேன் காபியை? இதோ தம்பியை வேணும்னு கேட்டுக்கோ'' என்று அவன் இருந்த இடத்துக்குப் போனுள்.

"ஏன் தம்பி, நானு காபியைக் குடிச்சேன்?'' என்றதும் அவன், "ஓகோ! கண்ணன் வந்துட்டுதா? இதோ, இப்பவே போய் வாங்கிக்கிட்டு வந்துடறேன்'' என்று நாலணவை எடுத்துக்கொண்டு வாசலில் ஓடினுன்.

அதுவரையிலும் வாசலில் நின்ற இரண்டு பேரும் தம்பி சத்திரத்துக்கு வழி காட்டத்தான் வருகிறுன் என்று அவன் பின்னுல் சென்ருர்கள். அப்புறம் என்ன ஆனுர்களோ என்னமோ எனக்குத் தெரியாது.

M. மோகன் (M. 100) எழும்பூர்.

* * * *

ஐந்து கேள்விகள்

இந்த வேட்டையில் உங்கள் நண்பன் நீங்கள் விரித்த வலையில் நிச்சயம் மாட்டிக்கொள்வான். முதலில் நீங்கள் அவனிடம், "நான் கேட்கும் ஐந்து கேள்விகளுக்கும் நீ தவருன விடைகளைச் சொல்ல வேண்டும்'' என்று சொல்லிவிடுங்கள். அவன் ஐந்து கேள்விகளுக்கும் தப்பாகவே பதில் சொல்லிவிட்டால் அவனுக்குத்தான் ஜயம். ஆனுல் ஒரு கேள்விக்காவது விடையை அவன் சரியாகச் சொல்லும்படி செய்துவிட்டால் நீங்கள்தான் ஜயித்தீர்கள். முதலில் நீங்கள் அவனை, "ஜவாஹர் யார்?'', "தீபாவளி எந்த மாதத்தில் வருகிறது?'' என்று இரு கேள்விகளைக் கேளுங்கள். அவன், "ஜவாஹர் இங்கிலீஷ்காரர்'',"தீபாவளி சித்திரை மாதம் வருகிறது'' என்று தவருன விடைகளைக் கூறுவான். பிறகு மூன்ருவதாக, "சூரியன் எங்கிருக்கிறது?'' என்ற கேள்வியைப் போடுங்கள். "கடலில் இருக்கிறது'' என்பான். பிறகு சிறிது யோசித்து, "இரண்டும் இரண்டும் என்ன?'' என்று நான்காவதாகக் கேளுங்கள். அவனது விடை, "எட்டு'' என்றிருக்கும். நீங்கள் பிறகு, தலையைச் சொறிந்து கொண்டு கொஞ்ச நேரம் யோசித்து நண்பனை டக்கென்று நோக்கி, "ஐயையோ, இன்னும் நான் உன்னை எத்தனை கேள்விகள் கேட்க வேண்டும்?'' என்று ஏமாற்றத்தோடு கேட்பதுபோல் கேளுங்கள். நண்பன், வெற்றிப் பெருமிதத்தோடு, "இன்னும் நீ ஒரே கேள்வி தான் கேட்கவேண்டும். அதற்கு மேல் கேட்டாயோ......'' என்று ஞாபகப்படுத்துவான். இப்பொழுது நீங்கள்தான் ஜயித்தீர்கள். ஏனெனில் நீங்கள் கேட்ட கடைசிக் கேள்விக்கு அவன், 'ஒன்று தான்' என்ற சரியான விடையைச் சொல்லிவிட்டானல்லவா?

(N. 68, கண்ணன் கழகம்.)

[தம்பி, நீ யாரிடம் இப்படி ஏமாந்தாய்?—ஆ-ர்.]

ஒரு வியாபாரி 4 படிக்கற்கள் வைத்திருந்தார், அவர் ஒரு பலம் முதல் 1 வீசை வரையில் எத்தனை பலம் சாமான் வேண்டுமானாலும் கொடுப்பார். ஒவ்வொரு படிக்கல்லின் மதிப்பு என்ன?

கிரிஜா, சென்னை 4.

மெத்த மெத்தக் கெட்டுப் பூட்டான்
வாத்தியா ரிடம்குட்டு வாங்கின கிட்டு
பைஜாமாவை மாட்டிக்கிட்டு
நைஜாமைப்போல் நெனைச்சுக்கிட்டு
கிறுக்குப் பேச்சுப் பேசிக்கிட்டு
கிராப் தலையைச் சீவிக்கிட்டு
சிலுக்குச் சட்டையை மாட்டிக்கிட்டு
கிரிக்கட் ஆட்டம் ஆடிக்கிட்டு
ஸ்கோர் என்னுன்னு கேட்டுக்கிட்டு
அப்பாவிடம் பணம் வாங்கிக்கிட்டு (மெத்த)

எம். சங்கரன் (V. 55)

*   *   *   *

விளையாட்டு

இந்தக் கட்டம் மாதிரி போட்டுக் கொள்ளுங்கள். அதில் வெள்ளைக் காய் மூன்றும் கறுப்புக் காய்கள் மூன்றும் இருக்கின்றன. அணா-காலணாக்களை இதற்கு உபயோகித்துக்கொள்ளலாம். விளையாட்டு என்னவென்றால் கறுப்புக் காய்கள் இருக்குமிடத்தில் வெள்ளைக் காய்களைக் கொண்டு வரவேண்டும். வெள்ளைக் காய்கள் இருக்குமிடத்தில் கறுப்புக் காய்களைக் கொண்டு வரவேண்டும். முதலில் ஒரு வெள்ளைக் காயை நகர்த்தினால் அடுத்த படி கறுப்புக் காய் ஒன்றைத்தான் நகர்த்தவேண்டும். அதுவும் ஒரு கட்டம்தான் நகர்த்தலாம். அந்தக் கட்டமும் காலியாக இருக்கவேண்டும். எங்கே, முயன்று பாருங்கள். 12 தரம் நகர்த்தினால் போதும்.



கி. பலராமன் (க. க), கும்பகோணம்.

(விடை வேறு பக்கத்தில் இருக்கிறது—ஆ-ர்)

ஒன்பது காய்களை வரிசைக்கு மூன்று வீதம் பத்து வரிசையில் வைக்கவேண்டும்.

சோலை - திருச்சிராப்பள்ளி.

(விடை கீழே இருக்கிறது—ஆ-ர்)

* * * *

விடைகள்

படிக்கற்கள்: 1, 3, 9, 27 பலம் கொண்ட கற்கள்.

* * * *



பத்து வரிசையில் 9 காய்களை இப்படித்தான் வைக்கவேண்டும்.

* * *

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம்.

இத்துடன் 'வியூமாஸ்டர்' பரிசுப் போட்டிக்குக் கதை எழுதியிருக்கிறேன். இந்திய அங்கத்தினர்கள்தான் எப்பொழுதும் பரிசைத் தட்டிக்கொண்டு போகிறார்கள். இலங்கை அங்கத்தினர்கள் வெட்கப் படுகின்றனர். அவர்கள் வெட்கத்தைத் தீர்த்து வைக்கவே பல நாட்கள் பாடுபட்டு இந்தக் கதையை எழுதியிருக்கிறேன். எனக்குத் தான் பரிசு தரவேண்டும். இல்லாவிட்டால் அழுவேன்.ம்...ம்...ம்...

இப்படிக்கு, க. செ. வரதராசன், கல்லாறு, E. P, சிலோன்.

* * * *

வெள்ளைக்காய்: 2 to 1, கறுப்பு: 5 to 2, வெ: 3 to 5, க: 7 to 3, வெ: 4 to 7, க: 3 to 4, வெ: 1 to 3, க: 2 to 1, வெ: 3 to 2, க: 6 to 3, வெ: 2 to 6, க: 1 to 2. அவ்வளவுதான்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இதற்குள் 2400 பேருக்குமேல் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள். உங்களுக்கும் இதில் சேரவேண்டுமென்று ஆசையாக இல்லையா? இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுதுகூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். அடுத்த இதழில் 'மெக்கானோ' பரிசுப் போட்டி வெளியாகும். அதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் கலந்துகொள்வதற்கில்லை. நவம்பர் மாதக் கண்ணன் தீபாவளி மலராக வெளிவரும். அது பற்றிய விளம்பரத்தைக் கடைசிப் பக்கத்தில் பாருங்கள்.

Reg. No. M. 5542.

இதோ, உங்களுக்கும் ஒரு மலர்!

கண்ணன் தீபாவளி மலர்

உங்களுக்கு ஏற்ற, உங்கள் மனசுக்கு உகந்த, உங்கள் பரிபூர்ண திருப்திக்கு இசைந்த மலராக அடுத்த நவம்பர் மாதக் கண்ணன் வருகிறது. அடடா, எப்படிப்பட்ட கதைகள் வரப்போகின்றன தெரியுமா? எவ்வளவு விதவிதமான வர்ணப் படங்கள்! புதுப் புது அம்சங்கள்! கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையானது! பொக்கிஷம் போன்றது!

இப்பொழுதே உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லிவையுங்கள்

விலை 12-அணாதான்

தபாலில் வேண்டும் குழந்தைகள் முன்னதாக 0-12-6 அணா ஸ்டாம்பு அனுப்பிவிட்டால்போதும். தீபாவளி அன்றே உங்கள் கையில் ஜம்மென்று வந்து சேர்ந்துவிடும் மலர்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை